

Annual Subscription Rs.100/-
திருமறை ஆசான்
புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்
மலர் - 38 இதழ் - 2 பிப்ரவரி - 2025
தனிப்பிரதி
ரூ.10/-

## ஜனவரி 12, 2025 பவானியில் நடந்த இலவச மருத்துவ முகாமின் போது...













## ஆசானின் அறிவுரையிலே ...


1. நிறுவன ஆசிரியர் உரை 3
2. கிறிஸ்துவின் நற்செய்தி 8
3. பெண்கள் பகுதி 11
4. வாலிபர் பகுதி 14
5. சிறுவர் பகுதி 16
6. எபிரெயர் 2 ஆம் அதிகாரம்... 18
7. வேதாகமம் மனிதனுக்கு... 23
8. மது, மாது, சூது 27
9. நீ ஆசீர்வாதமாய் இருப்பாய் 30

# THIRUMARAI AASAAN

S. Rajanayagam
Editor
86-A, Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.
PH. : 04257 - 230030 Cell : 98427 - 30382, 99655 - 30385
Pleading for the restoration of pure New Testament Christianity

Vol. 38 February - 2025 Issue - 2

நிறுவன ஆசிரியர் உரை

## கேளுங்கள்! சிந்தியுங்கள்! செயல்படுங்கள்!

ஆவியானவர் சபைக்குச் சொல்லுகிறதைக் காதுள்ளவன் கேட்கக் கடவன் என்று வெளிப்படுத்தின விசேஷம் பல இடங்களில் எச்சரித்துப் புத்தி சொல்கிறது (வெளி 2:7, 11, 16, 29, 3:6,13, 22:13:9). ஏன் அப்படி கூறுகிறது? ஏனெனில், வேதாகமத்தைப் படிக்கிற மக்கள் ஒன்றுபோல அதை புரிந்து கொண்டு, அதற்குக் கீழ்ப்படிவதில்லை. உதாரணத்துக்கு சில: எசே 33:30, 31-ல் ***உனக்கு முன்பாக என் ஜனங்கள் போல் உட்கார்ந்து உன் வார்த்தைகளைக் கேட்கிறார்கள். ஆனாலும் அவர்கள் அவைகளின்படி செய்கிறதில்லை. அவர்கள் தங்கள் வாயினாலே இன்பமாய்ப் பேசுகிறார்கள். அவர்கள் இருதயமோ பொருளாசையைப் பின்பற்றிப் போகிறது*** என்று அவர்கள் மாயத்தை சாடுகிறார். பெந்தே கோஸ்தே நாளில் அப்போஸ்தலன் பேதுருவின் உருக்கமான முதல் நற்செய்திப் பிரகடனத்தைத் திரளான மக்கள் கேட்டு பிரமிப்பு அடைந்தனர். ஆனால், மூவாயிரம் பேர் மட்டுமே இருதயத்தில் குத்தப்பட்டு, தாங்கள் என்னச் செய்ய வேண்டுமென்று கேட்டு அறிந்து ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டனர். (அப் 2:5-12;37, 41.) பெரும்பான்மையானோர் கேட்டதோடு சரி, செயல்படவில்லை.

இதை விடக் கொடுமை ஸ்தேவானின் உரையைக் கேட்ட மக்கள் செய்த காரியம். அவர்கள் கீழ்ப்படியாததுமட்டுமல்ல. மூர்க்க மடைந்து, அவனைப்பார்த்துப் பல்லைக்கடித்துக் கல்லெறிந்து கொன்றே விட்டார்கள். (அப் 7:54,57, 60) அத்தேனே பட்டணத்தில் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவே உலக இரட்சகர் என்று வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த உரையொன்றை நிகழ்த்தினார் பவுல். ஆனால், தாங்கள் மெத்தப் படித்தவர்கள் என்ற மமதையால் சிலர் அவரை இகழ்ந்தனர். வேறு சிலர் நீ சொல்வதை இன்னொரு நாளைக்கு கேட்போம் என்று ஒத்தி வைத்தார்கள். ஒரு சிலர் மட்டுமே அவரைப் பற்றிக் கொண்டு விசுவாசிகளானார்கள் (அப்.17:34).

ஆம் சகோதரர்களே, சூரிய வெளிச்சமும், உஷ்ணமும், அறுத்து வைக்கப்பட்டுள்ள சுடாத செங்கல்லின் மீதும், பனிக்கட்டி மீதும் ஒரே விதமாகப் பாய்ந்தாலும் அப்பொருட்களின் தன்மைகளில் வித்தியாசமான விளைவுகளை ஏற்படுத்துகிறது. செங்கல் இறுகுகிறது; பனிக்கட்டி உருகுகிறது, அதே போன்று சொல்லப்படு கிற வசனங்கள் ஒரே மாதிரியாக இருந்த போதிலும், வசனங்களை கேட்கிற உள்ளங்கள் வித்தியாசமாக இருக்கின்றன என்று இயேசு, தமது விதைக்கிறவன் உவமையிலே சொல்லுகிறார்(மத் 13:15-23;லூக் 8: 12, 15,18.) அவர் கேட்கிற மக்களின் இதயங்களை நான்கு வகையாகப் பிரிக்கிறார்.

***முதலாவது வகை :*** எப்போதும் கற்றாலும் ஒருபோதும் சத்தியத்தை அறிந்து உணராதவர்கள். பாலஸ்தீனா நாட்டின் வயல் வெளிகளில் மக்கள் நடந்து செல்வதற்கு ஒற்றையடிப்பாதை இருக்கும். அதில் மக்கள் நடந்து மிதிப்பதால் இறுகிபோயிருக்கும். விதைக்கும் போது அதன் மீது விழுகிற விதைகள் ஏர் உழவுக்கு சிக்காமல் மேலேயே கிடக்கும் : ஆகாயத்து பறவைகளின் கண்களில் அது சீக்கிரமாய்த் தென்படுவதால் அவைகள் அவைகளை பொறுக்கிச் சாப்பிட்டுவிடும். ஆகையால், அது முளைப்பதற்கே வாய்ப்பில்லை. வளர்வது கனி கொடுப்பது என்பது பற்றிய பேச்சுக்கே இடமில்லை. அதைப் போன்று சிலருடைய இருதயங்களில் கர்த்தருடைய வார்த்தைகள் போய்ச் சேருவதில்லை. ஒரு காதில் கேட்டு மறு காதில் விட்டு விடுகின்றனர். மத்தேயு, இப்படிப்பட்ட மக்களின் நிலையை விளக்க ஏசாயா மற்றும் எசேக்கியேல் தீர்க்கதரிசிகளின் வார்த்தைகளை மேற்கோள் காட்டிக் கடிந்துகொள்ளுகிறார் (ஏசாயா 6:9, 10; எசே.12:2).

***இரண்டாம் வகை:*** ஆழமான வேர் இல்லாத செடியைப் போன்றவர்கள் (லூக் 8:13) பாலஸ்தீனா நாட்டில் சுண்ணாம்பு பாறைகள் அதிகம். அதன் மேற்பகுதியில் மழை, காற்று ஆகியவைகளால் கொண்டு வரப்பட்ட சொற்ப மண்ணே படிந்திருக்கும். அவைகளின் மீது விழும் விதைகள் முளைத்து வேரூன்றி கனி கொடுக்கக்கூடிய அளவு மண் ஆழமாக இருக்காது. அதனால் அவைகள் சீக்கிரமாக வாடி உலர்ந்து போகும். அதைப் போன்று, சிலர் வசனத்தை ஆர்வத்தோடு கேட்பார்கள், உற்சாகமாக ஏற்றுக் கொள்வார்கள். ஆனால், உறுதியாக பிடித்துக்கொள்ளமுடியாமல் தடுமாறுவார்கள். சோதனைகள் வரும்போது தாக்குப் பிடிக்க முடியாமல் துவண்டுபோவார்கள்.

லூக்கா ஆசிரியர் சோதனை என்று குறிப்பிடுகிற இந்த நிலையை மத்தேயு ***உபத்திரவங்கள் என்று குறிப்பிடுகிறார்***. (மத் 13:21) ஆணீவே, சத்தியத்தை ஏற்றுக்கொண்டு அதில் நிலைத்திருப்பது என்பது ஆழமான உறுதியான வேர்கள் உள்ள செடிகள் அல்லது மரங்களுக்குச் சமம். உபத்திரவங்கள், துன்பங்கள், சோதனைகள் என்று பலதரப்பட்ட எதிர்மறையான சூழல்கள், இகழ்ச்சிகள் இழப்புகள் விசுவாசிகளுக்கு ஏற்படும்போது அவைகளைத் தாங்கி நிற்கும் மன உறுதி வேண்டும்.

அப்போஸ்தலன் பவுல் இதை ***அன்பில் வேரூன்றுதல்*** என்று வர்ணிக்கிறார் (எபே 3:17) அவர் கொலோசேயருக்கு அறிவுரை கூறும்போது ***நீங்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டபடியே அவருக்குள் வேர் கொண்டவர்களாகவும் அவர் மேல் கட்டப்பட்டவர்களாகவும் அவருக்குள் நடந்துகொண்டு, நீங்கள் போதிக்கப்பட்டபடியே விசுவாசத்தில் உறுதிப்பட்டு ஸ்தோத்திரத்தோடே அதில் பெருகுவீர்களாக*** என்கிறார் (கொலே 2:6,7). மேற்கூறிய வசனங்கள் நமக்கு உணர்த்துகிற காரியம் தேவனுடைய வார்த்தைகளை நாம் படித்துத் தெரிந்து கொள்வதோடு நிறுத்திக் கொள்ளாமல் அதைத் தியானித்து ஏற்றுக்கொண்டு வாழ்க்கையில் கடைப்பிடிப்பதில் உறுதியாக இருக்க வேண்டும் என்பதாகும் (யாக் 1:22).

***மூன்றாவது வகை :*** எதிர்த்துப் போராட முடியாத ஒரு நிலையைக் குறிக்கிறது (லூக் 8:14), சில நிலங்கள் செழிப்புள்ளதாக இருக்கும். ஆனால், களைகள் நீக்கப்படாமலும், சரியாகப் பண்படுத்தப்படாமலும் இருக்கும்போதே விதைகள் விதைக்கப் பட்டுவிடும். விதை முளைத்து வளரும்போது கூடவே களைகளும் வளர்ந்து, பயிர்களை வளரவிடாமலும், வளர்ந்தாலும் கனி கொடுக்க முடியாமலும் இடைஞ்சல் உண்டாக்கும். அது போன்று சிலருடைய இதயங்களில் குடிகொண்டிருக்கும் பாவ இயல்புகள் கர்த்தருடைய வசனங்கள் கிரியை செய்ய முடியாதபடி தடுத்துப் போடுகின்றன. அந்த தடங்கல்கள் மூன்று வகையானது என்று இயேசு இந்த உவமையில் குறிப்பிடுகிறார்.

***[அ] உலகக்கவலை :*** (1 பேதுரு 5:7) ஐஸ்வரிய மயக்கம் (மத் 6:19) உலக உல்லாசம் (பிலி 3:19; 1 தீமோ 5:6, 2 தீமோ 3:4 ***மாமிசமும் மனதும் விரும்பினவைகளைச் செய்கிறார்கள்*** என்றும், ***அக்கிரமங்களினாலும், பாவங்களினாலும் மரித்தவர்கள்*** என்றும் வேதாகமம் இப்படிப் பட்டவர்களை வர்ணிக்கிறது (எபே 2:1-3). மெய்க் கிறிஸ்தவர்கள் இப்படிப்பட்ட இச்சைகளை வெறுத்து, இவ்விதமான இயல்புகளிலிருந்து தப்பி நடக்கவேண்டும் (1 யோவான் 2: 16).

***நான்காவது வகை :*** இதயத்தில் வசனத்தை ஏற்றுக் கொண்டு கனி கொடுக்கிற நிலைக்கு ஒப்பிடப்பட்டிருக்கிறது (லூக் 8:15) பாலஸ்தீனா நாட்டில் சமவெளிப் பகுதிகளும் உண்டு. அவைகளில் ஆண்டு முழுவதும் தருணத்துக்கேற்ற வேளாண்மைகள் செய்து கொண்டிருக்கிறபடியால் களைகள் நீக்கப்பட்டு பண்பட்டிருக்கும். அதைப் போன்று நல்ல இதயங்களில் சொல்லப்படுகிற சத்தியம் ஸ்திரமாக வேர் ஊன்றி எதிர்ப்பார்க்கிற நல்ல பலனைக் கொடுக்கும். ***நான் வந்து உங்களைக் கண்டாலும், நான் வராமலிருந்தாலும், நீங்கள் ஒரே ஆவியில் உறுதியாய் நின்று ஒரே ஆத்துமாவினாலே சுவிசேஷத்தின் விசுவாசத்துக்காகப் போராடி எதிர்க்கிறவர்களால் ஒன்றிலும் மருளாதிருக்கிறீர்கள் என்று***

***உங்களைக் குறித்து நான் கேள்விப்படும்படி எவ்விதத்திலும் நீங்கள் கிறிஸ்துவின் சுவிசேஷத்துக்குப் பாத்திரமாக மாத்திரம் நடந்து கொள்ளுங்கள்*** (பிலி 1:27) என்ற பவுலின் அறிவுரையின்படியும், எபி 12:1 கூறுகிறபடியும் பொறுமைசாலிகளாகவும் இருக்கிற மக்கள் மேல் தேவன் பிரியமாயிருக்கிறார்.

முதலில் சொல்லப்பட்ட மூன்று இதயங்களைக் காட்டிலும் நான்காவதாகச் சொல்லப்பட்ட இருதயம் எப்படி வித்யாசப்படுகிறது என்று கவனியுங்கள். (அ) உண்மையும் உத்தமமுமான இருதயம் ஏனோதானோவென்று கேட்கிற இருதயத்தைவிட வித்தியாசமாயிருக்கிறது (ஆ) முதலில் ஆர்வத்தோடு கேட்டு சோதனைகளும், உபத்திரவங்களும் வரும்போது பின்வாங்கிப்போகிற இருதயத்தை விட வித்தியாசமாக இருக்கிறது (இ) முட்கள் களைகள் ஆகிய உலகக் கவலைகளாலும் ஐஸ்வரியத்தின் மயக்கத்தினாலும் நெருக்கப்பட்டு கனிகொடுக்க முடியாத நிலையைக் காட்டிலும் வித்தியாசமாக இருக்கிறது.

**இந்த உவமை நம்முடைய கிறிஸ்தவ வாழ்க்கைக்கு என்ன அர்த்தத்தைக் கொடுக்கிறது?**

(1) கிறிஸ்தவனாவதற்குத் தேவையான முதல் காரியம் விசுவாசம் (மாற்கு 10:10; யோவான் 9:24; அப். 2:38 அப். 8:37; 16:31)

(2) மனம் திரும்பவேண்டும். அதாவது, நம்முடைய பாவ நிலைக் காக மெய்மனஸ்தாபப்பட்டு அவ்வழிகளை வெறுத்து ஒதுக்கி ஒரு புதிய வாழ்க்கையை துவங்குவதற்கான தீர்மானத்துக்கு வரவேண்டும் (லூக் 15:16.30 ; 13:3, அப் 2:38; 3:19:17:30,

(3) பின்னர் பாவங்கள் போகத் தண்ணீரில் மூழ்கி ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ள வேண்டும். (அப் 2:38; அப் 22:15; 1பேது 3:21) தவறான போதகங்களைக் கேட்டு மனதைக் கடினப்படுத்திக்கொள்ளுதல், சொல்லுகிறவனுடைய தகுதியை எடைபோட்டுக் கொண்டு தேவனுடைய வசனத்தின் கருத்தாழத்தை புரிந்துகொள்ள மன மில்லாமல் தங்களுடைய தவறான போக்கையும், நிலையையும் கண்டு கொள்ளாமை, தங்களுடைய போலி பக்தியை அங்கீகரித்து ஆறுதல் கூறும் கள்ளப் போதகர்களைச் சார்ந்து கொண்டு சத்தியத்தைக் கேட்டும் கீழ்ப்படிய மனமில்லாத நிலை ஆகியவைகள் நம்முடைய ஆத்துமாவை நரகத்துக்கு இழுத்துச் செல்லும் என்பதை உணரவேண்டும்.

அர்ப்பணிக்கப்பட்ட கிறிஸ்தவ வாழ்க்கைக்கு இந்த உவமையைப் பொருத்திப் பாருங்கள். கிறிஸ்தவர்கள் தீமையை வெறுத்து ஒதுக்க வேண்டும்.(ரோமர் 12:9.) பாவம் என்பது ரசித்து மகிழ உதவும் விளையாட்டுப் பொருள் அல்ல. விளக்கின் ஒளியில் மயங்கிச் சுற்றிச் சுற்றி வந்து இறுதியில் மாண்டு போகும் விட்டில் பூச்சியை நினைத்துக் கொள்ளுங்கள். பாவம் என்பது

மடியில் வைத்துக் கொஞ்சுவதற்கு ஏற்ற பூனைக்குட்டி போன்ற மனதுக்கு சுகம் தரும் சாதுவான பிராணி அல்ல. கொஞ்சம் ஏமாந்தால் குரல்வளையைக் கடித்து இரத்தத்தை உறிஞ்சிக் குடித்து ஆத்துமாவை சேதப்படுத்தி பிசாசுக்கும், அவனுடைய ஆட்களுக்கும் ஆயத்தம் செய்து வைக்கப்பட்டிருக்கும் நரகத்தில் கொண்டுபோய்ச்சேர்க்கும் கொடிய விலங்கு. ஆகவே, ஒரு கிறிஸ்தவன் தீமையாகத் தோன்றும். எல்லாவற்றிற்கும் விலகியிருக்க வேண்டும் என்று எச்சரிக்கப் படுகிறான் (1 தெச 5:22) ஆகவே, அது நம்மை மீறி என்ன செய்துவிடும்? கொஞ்சம் சுவைத்து விட்டுப் பின்னர் விட்டுவிடலாம் என்ற எண்ணம் கூடவே கூடாது. கம்பளி போனால் போகட்டும் கையை விட்டால் போதும் என்று நீ கதறுவாய். அந்தோ பரிதாபம், கரடி உன்னைக் கெட்டியாக பிடித்துக் கொள்வதால் ஆற்றோடு அடித்துச் செல்லப்பட்டு மரணமடைவாய். நெருப்போடு விளையாட வேண்டாம்.

இன்றே தேவ வார்த்தையைக் கேள்! ஆழ்ந்து சிந்தி! உடனே செயல்படு. இன்றே இரட்சண்ய நாள். இப்பொழுதே அனுக்கிரக காலம். உன் உயிர் எப்போது எடுத்துக் கொள்ளப்படும் என்பதும் கர்த்தர் மீண்டும் எப்போது வருவார்? என்பதும் அறியப்படாத இரகசியம் ஆகையால் தாமதியாதே.

†

---

### நாம் போராட வேண்டும்? எவைகளுடன்

1. பிசாசுடன் (அந்தகார லோகாதிபதி) – எபே.6:12
2. பாவத்திற்கு எதிராக – எபி.12:4
3. உலக மனிதர்களுடன் – ஏசா.41:12, 1கொரி.15:32
4. மாம்சத்தோடு –எபே.6:12
5. விசுவாசத்திற்காக – யூதா.3,1தீமோ.6:12,பிலி.1:27
6. ஜெபத்தில் – கொலே.4:12

**திருமறை ஆசான்** இதழின் நிறுவன ஆசிரியர் அய்யா **E.Z. செல்வநாயகம்** அவர்கள் பரம இளைப்பாறுதலுக்குள் பிரவேசித்து (9.2.2025) **32 ஆண்டுகள்** நிறைவுறுவதால் அவர் நினைவாக அய்யாவின் இக்கட்டுரை வெளியிடப்படுகிறது.

**– ஆசிரியர்.**

பாடம் 1

# கிறிஸ்துவின் நற்செய்தி

**சகோ. JC. சோட்**

(**சென்ற மாத இதழின் தொடர்ச்சி...**)

**ம**த்தேயு, மாற்கு, லூக்கா மற்றும் யோவான் போன்ற புத்தகங்களில் ராஜ்ஜியத்தின் சுவிசேஷம் என்னும் சொற்றொடர் பலமுறை பயன் படுத்தப்பட்டிருக்கிறது. பின்பு, இயேசு சகல பட்டணங்களையும், கிராம ங்களையும் சுற்றி நடந்து, ஜெப ஆலயங்களில் உபதேசித்து, ராஜ்யத்தின் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து, ஜனங்களுக்கு உண்டா யிருந்த சகல வியாதிகளையும், சகல நோய்களையும் நீக்கி அவர்களைச் சொஸ்தமாக்கினார் (மத்.9:35).

***யோவான் காவலில் வைக்கப்பட்ட பின்பு, இயேசு கலிலேயாவிலே வந்து, தேவனுடைய ராஜ்யத்தின் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து, காலம் நிறைவேறிற்று, தேவனுடைய ராஜ்யம் சமீபமாயிற்று, மனந்திரும்பி, சுவிசேஷத்தை விசுவாசியுங்கள்*** என்றார் (மாற்கு 1:14,15).

இக்கால கட்டங்களில் கிறிஸ்துவும், மற்றவர்களும் வரவிருந்த ராஜ்யத்தின் நற்செய்தி பற்றி பிரசங்கித்தார்கள். வேறுவிதமாகச் சொன்னால், ராஜ்ஜியம் அப்போது ஸ்தாபிக்கப்படவில்லை. ஆனால், விரைவில் ஸ்தாபிக்கப்படவிருந்தது. பிற்பாடு சுவிசேஷம் நம் ஆண்டவருடைய மரணம், அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதலை அடிப்படையாகக் கொண்டு பிரசங்கிக்கப்பட்டது. அதன் கட்டளை களுக்கு கீழ்ப்படிந்தவர்கள் இரட்சிக்கப்பட்டு கர்த்தருடைய சபையிலே அல்லது ராஜ்ஜியத்திலே சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள் (அப். 2).

அதன் பின்பு நாம் இரட்சிப்பின் சுவிசேஷம் பற்றி வாசிக்கிறோம். எபேசிய கிறிஸ்தவர்களுக்கு பவுல் இவ்விதமாக எழுதுகிறார். நீங்களும் உங்கள் இரட்சிப்பின் சுவிசேஷமாகிய சத்திய வசனத்தைக் கேட்டு, விசுவாசிகளானபோது, வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட பரிசுத்த ஆவியால் அவருக்கள் முத்திரை போடப்பட்டீர்கள் (எபேசியர் 1:13). சில வேளைகளில் நாம் இரட்சிப்பின் சுவிசேஷ திட்டத்தை பற்றி பேசுகிறோம். இது மனிதனை இரட்சிப்பதற்கு கர்த்தருடைய திட்டம் அல்லது இரட்சிப்பின் வழி பற்றி விவரிக்கிறது.

அடுத்ததாக, நமக்கு சமாதானத்தின் சுவிசேஷம் உண்டு. ரோமர் 10:15 ல் நாம் இவ்விதமாக வாசிக்கிறோம் அனுப்பப்படாவிட்டால் எப்படிப் பிரசங்கிப்பார்கள்? சமாதானத்தைக் கூறி, நற்காரியங்களைச் சுவிசேஷமாய் அறிவிக்கிறவர்களுடைய பாதங்கள் எவ்வளவு அழகானவைகள் என்று

எழுதியிருக்கிறதே (ரோமர் 10:15). அதுபோல் எபேசியர் 6:14-16, இவ்விதமாகச் சொல்கிறது. ***சத்தியம் என்னும் கச்சையை உங்கள் அரையில் கட்டினவர்களாயும், நீதியென்னும் மார்க்கவசத்தைத் தரித்தவர்களாயும், சமாதானத்தின் சுவிசேஷத் திற்குரிய ஆயத்தம் என்னும் பாதரட்சையைக் கால்களிலே தொடுத்தவர்களாயும், பொல்லாங்கன் எய்யும் அக்கினியாஸ் திரங்களையெல்லாம் அவித்துப்போடத்தக்கதாய், எல்லாவற்றிற்கும் மேலாக விசுவாசமென்னும் கேடகத்தைப் பிடித்துக்கொண்டவர் களாயும் நில்லுங்கள்*** (எபேசியர் 6:16). சுவிசேஷம் சமாதானத்தை கொண்டு வருகிறது. அதாவது, மனதுக்கு சமாதானத்தை கொண்டு வருகிறது, ஆத்துமாவுக்கு சமாதானத்தை கொண்டு வருகிறது. சக மனிதர்களோடு சமாதானத்தை கொண்டு வருகிறது. கிறிஸ்து சமாதானத்தின் மனிதராக இருந்தார். அவருடைய சுவிசேஷம் அவர் தேவனோடு அனுபவித்த சமாதானத்தைக் கொண்டு வருகிறது. அதாவது, தேவ சமாதானத்தை கொண்டு வருகிறது. இது நிச்சயமாக நற்செய்திதானே.

கடைசியாக, நாம் நம்பிக்கையின் நற்செய்தி பற்றி வாசிக்கிறோம். முன்னே அந்நியராயும், துர்க்கிரியைகளினால் மனதிலே சத்துருக்களா யுமிருந்த உங்களையும் பரிசுத்தராகவும், குற்றமற்றவர்களாகவும், கண்டிக்கப்படாதவர்களாகவும் தமக்கு முன் நிறுத்தும்படியாக அவருடைய மாம்ச சரீரத்தில் அடைந்த மரணத்தினாலே இப்பொழுது ஒப்புரவாக்கினார். நீங்கள் கேட்ட சுவிசேஷத்தினால் உண்டாகும் நம்பிக்கையை விட்டு அசையாமல், ஸ்திரமாயும், உறுதியாயும் விசுவாசத்திலே நிலைத்திருப்பீர்களானால் அப்படியாகும். அந்தச் சுவிசேஷம் வானத்தின் கீழிருக்கிற சகல சிருஷ்டிகளுக்கும் பிரசங்கிக்கப்பட்டு வருகிறது. அதற்கென்றே பவுலாகிய நான் ஊழியக் காரனானேன் (கொலோசெயர் 1:21-23). ஒருவர் சுவிசேஷத்திற்கு கீழ்ப்படிவதின் பலனாக ஜீவனுக்கான நம்பிக்கையையும், நித்திய ஜீவனுக்கான நம்பிக்கையையும் பெற்றுக் கொள்கிறார். இதைக் குறித்து தான் பவுல் இவ்வசனப் பகுதியில் பேசுகிறார். நம்பிக்கை வேறு எந்த வழியிலும் வராது.

அப்போஸ்தலனாகிய பவுல் அவ்வப்போது என் சுவிசேஷம் அல்லது எங்களுடைய சுவிசேஷம் என்று குறிப்பிடுவதை நாம் பார்க்கிறோம். இதன் பொருள் என்ன? இங்கே பவுல் தானும் மற்றவர் களும் கர்த்தரிடத்திலிருந்து பெற்றுக் கொண்ட சுவிசேஷம் பற்றித் தான் பேசுகிறார். எங்கள் சுவிசேஷம் உங்களிடத்தில் வசனத்தோடே மாத்திரமல்ல, வல்லமையோடும், பரிசுத்த ஆவியோடும், முழு நிச்சயத்தோடும் வந்தது. நாங்களும் உங்களுக்குள்ளே இருந்தபோது உங்கள் நிமித்தம் எப்படிப்பட்டவர்களாயிருந்தோமென்று அறிந்திருக் கிறீர்களே (1 தெசலோனிக்கேயர் 1:5). இங்கேயும், ரோமர் 1: 16 ல் குறிப்பிடப்பட்டிருக்கிறபடி விசுவாசிக்கிறவன் எவனோ அவனுக்கு இரட்சிப்பு உண்டாவதற்கு அது தேவ பலனாய் இருக்கிறது.

வேதவாக்கியங்களின் வெளிச்சத்தில் இதுதான் சுவிசேஷமாய் இருக்கிறது. இது எளிமையாய் இருந்தாலும் மிகவும் வல்லமை உள்ளதாய் இருக்கிறது. இது இன்று போல புதியதாகவும், கிறிஸ்துவைப் போல காலமற்றதாகவும் உள்ளது. இந்த சுவிசேஷம் நம்மை இரட்சிக்கிறது, நமக்கு நம்பிக்கையைக் கொடுக்கிறது. எல்லோருக்கும் பிரசிங்கிக்கப்பட வேண்டிய சுவிசேஷம் ஒன்றுதான். இந்த சுவிசேஷம் கிறிஸ்தவனிடத்திலிருந்தும் தேவனிடத்திலிருந்தும் வந்தது, இது மகிமையானது. இது நம்மை ஆசீர்வதிக்கிறது. அதே நேரத்தில் நமக்கு பொறுப்புகளையும் தருகிறது. இந்த சுவிசேஷம் ஒவ்வொருவருக்கானது, அதே நேரத்தில் எல்லோருக்குமானது. உண்மையாகவே இதுதான் நற்செய்தி. †

## புதிய ஏற்பாட்டில் ஓரே பெயரில் பல நபர்கள்

**மரியாள் என்ற பெயரில் 6 நபர்கள் இருக்கிறார்கள்.**

1. இயேசுவின் தாயாகிய மரியாள். மத்தேயு:2:11

2. மகதலேனா மரியாள்.
   இயேசு மரித்து மூன்றாம் நாளிலே உயிர்த்தெழுந்ததை முதன் முதலாக கண்ணார கண்டது இவர்தான், மாற்கு 16: 9-10 ல் பார்க்கலாம்.

3. லாசருவின் சகோதரியான மரியாள்.
   யோவான் 12:3 பார்க்கலாம்.

4. மாற்குவின் தாயாகிய மரியாள்.
   மாற்கு சுவிசேஷ புத்தகத்தை எழுதிய மாற்குவின் தாய் தான் இந்த மரியாள். அப் 12: 12 பார்க்கலாம்.

5. கிலெயோப்பாவின் மனைவி மரியாள். யோவான்:19:25
   இயேசுவின் தாயாகிய மரியாளின் உடன்பிறந்த சகோதரி தான் இந்த மரியாள். இவள் கணவரின் பெயர் கிலெயோப்பா மகனின் பெயர் யாக்கோபு, யோசேப்பு என்று மத்: 27:56 பார்க்கலாம்.

6. ரோம திருச்சபையில் இருந்த மரியாள்.
   ரோமர் 16:6 ல் பார்க்கலாம்

# இருபாலரும் கூடியுள்ள இடத்தில் ஒரு பெண் பிரசங்கிக்க முடியுமா?

**Sis. ரேச்சல் இராஜநாயகம்**

இன்றைக்கு இருக்கும் பெரும்பாலான சபைப் பிரிவுகளில் ஆராதனைகளில் பெண்கள் முக்கியப் பங்கேற்று செயல்படுகின்றனர். இப்படிச் செய்வதற்கும் அல்லது செய்ய அனுமதிக்கப்படுவதற்கும் காரணம், பெண்கள் தாழ்ந்தவர்களாகவும், முக்கியத்துவமற்றவர்களாகவும் கருதப்பட்ட அந்தக் கால வேதாகம் நாட்கள் கடந்து போய்விட்டதென்றும், இப்பொழுது ஆண்கள் செய்யும் எதையும் செய்வதற்கு இவர்களுக்கும் உரிமையுண்டு என்றும் எண்ணுவது தான். எப்படியோ காலங்காலமாய் பெண்களுக்கு இழைக்கப்பட்ட அநீதி எடுத்துப் போடப்பட்டுவிட்டது என்று எண்ணி இப்புதிய சித்தாந்தத்தில் அநேகர் திளைக்கின்றனர். அதனால் இப்பொழுதெல்லாம் பெண்கள் பிரசங்கிக்கின்றனர். பேராயர்களாக ஏற்படுத்தப்படுகின்றனர். ஆண்கள் அணியும் அங்கிகளை தாங்களும் அணிந்து, ஆண்கள் செய்யும் வேலைகளையும் செய்கின்றனர்.

இப்புதிய சுயாதீனக் கொள்கை தேவனால் அங்கீகரிக்கப் பட்டிருக்கிறதா? வேதாகமத்தின் கொள்கைகள், அது எழுதப்பட்ட முதல் நூற்றாண்டு காலத்துக்கும், அதற்கு முந்திய காலத்துக்கும் மாத்திரம் பொருந்தக்கூடிய கோட்பாடுகளைக் கொண்டதா? இது. தேவச் சித்தத்தின்படி கொடுக்கப்படாமல், உண்மையாகவே மனிதனிடத்திலிருந்து வந்த வார்த்தையாக இருக்குமானால், நம்மையும் அறியாமல் பழங்காலத் கொள்கைகளினால் அடிமையாக்கப்பட்டிருக்கிறோம் என்பது பொருள். ஆனால், வேதவாக்கியங்கள் பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டதாய் இருந்து அது மனிதனுக்காக தேவனிடத்திலிருந்து கொடுக்கப்பட்டதாக இருக்குமானால், எந்த ஒரு மனிதனும் அதை, காலத்துக்கு ஒவ்வாதது என்றும். இக்காலத்துக்கு சம்பந்தம் இல்லாதது என்றும் சொல்வதற்கு அதிகாரம் பெற்றவனாய் இருக்க முடியாது.

இயேசு கிறிஸ்துவானவர் கூறுகையில், 'என்னைத் தள்ளி என் வார்த்தைகளை ஏற்றுக்கொள்ளாதவனை நியாயத்தீர்க்கிற தொன்றிருக்கிறது. நான் சொன்ன வசனமே அவனைக் கடைசிநாளில் நியாயந்தீர்க்கும்' (யோவான் 12:48) என்கிறார். மேலும் மத். 16:19-ல் பரலோகராஜ்யத்தின் திறவுகோல்களை நான் உனக்குத் தருவேன்; பூலோகத்திலே தீ கட்டுகிறது எதுவோ அது பரலோகத்திலும்

கட்டப்பட்டிருக்கும். பூலோகத்திலே நீ கட்டவிழ்ப்பது எதுவோ அது பரலோகத்திலும் கட்டவிழ்க்கப்பட்டிருக்கும் என்றார். வேத வசனங்க ளெல்லாம் தேவனுடைய வார்த்தைகள் தான்; அவைகள் மனிதனின் கோட்பாடுகள் அல்ல. வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது (2 தீமோத் : 3:16). வேதாகமத்தை எழுதி முடிக்கிற தருவாயில், தேவன் கொடுத்துள்ள எச்சரிப்பைப் பாருங்கள். இந்தப் புஸ்தகத்திலுள்ள தீர்க்கதரிசன வசனங்களைக் கேட்கிற யாவருக்கும் நான் சாட்சியாக எச்சரிக்கிறதாவது, ஒருவன் இவைகளோடே எதையாகிலும் கூட்டினால் இந்தப் புஸ்தகத்தில் எழுதியிருக்கிற வாதைகளைத் தேவன் அவன் மேல் கூட்டுவார். ஒருவன் இந்தத் தீர்க்கதரிசன புஸ்தகத்தின் வசனங்களிலிருந்து எதையாகிலும் எடுத்துப்போட்டால், ஜீவ புஸ்தகத் திலிருந்தும், பரிசுத்த நகரத்திலிருந்தும், இந்தப் புஸ்தகத்தில் எழுதப் பட்டவைகளிலிருந்தும். அவனுடைய பங்கைத் தேவன் எடுத்துப் போடுவார். (வெளி: 22:18,19)

தேவனுடைய வார்த்தைகளை எடுத்துக் கையாளுவதென்பது சாதாரண விஷயமல்ல. அவர் எழுதினதிலிருந்து தனக்கு அதிகாரமிருக்கிறது என்ற எண்ணத்தில் தன்னை தேவனுக்கு மேலாக எண்ணி, எழுதப்பட்டதற்கு விரோதமாக எதையாவது ஒருவன் மாற்றினால், அது அவனுக்கு அழிவைத்தான் கொண்டு வரும். அப்போஸ்தலனாகிய பவுல், (கலா:1:8) வசனப்பகுதிகளில் ‘வானத்திலிருந்து வருகிற ஒரு தூதனாவது, வேறொரு சுவிசேஷத்தை உங்களுக்குப் பிரசங்கித்தால் அவன் சபிக்கப்பட்ட வனாயிருக்கக்கடவன்‘ என்கிறார். ஆணும், பெண்ணும், நியாயத்தீர்ப்பின் நாளில் ஆக்கினையை சந்தித்தாக வேண்டும்.

இயேசு ஆராய்ச்சி மாநாடு‘ (Jesus Seminar) என்பது, வேதப்படிப்பில் ‘அதிகாரம் பெற்றவர்கள்‘ என்றும், மத உலகில் தங்களை ‘தலைவர்கள்‘ என்றும் அழைத்துக்கொள்ளும் ஒரு கூட்டத்தார். சுவிசேஷ உண்மையை ஆராய்ச்சி செய்த நிகழ்வு பற்றி ரசல் ஷோர்டோ (Rusell Shorto) என்பவர் ஒரு கட்டுரை எழுதினார். அவர் சொல்லும் போது, ‘இயேசு ஆராய்ச்சியாளர் மாநாட்டினர்‘ சுவிசேஷத்தை ஒவ்வொரு வார்த்தையாக ஆழ்ந்து ஆய்வு செய்கின்றனர், இப்படிச் செய்வது தன்னில் தானே முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கிறது.சுவிசேஷத்தில் உள்ள எந்த வார்த்தைகளும், எந்த நிகழ்வும் வரலாற்றில் தோன்றிய இயேசுவுக்குச் சொந்தமானது என்று இவர்கள் கூடித் தீர்மானிப்பது இவர்களுடைய துணிகரமான செயலை நமக்கு வெளிப்படுத்துகிறது. அவர்கள், இப்படித் தீர்மானிப்பதின் மூலம் இயேசுவுக்குச் சொந்தமான வார்த்தைகளும், நிகழ்வுகளும் எதுவென்று சொல்லுகிறார்களோ அதைத் தவிர மற்ற வேத பகுதிகள் எல்லாம், ‘கதை சொல்பவர்களால்‘ கூட்டப்பட்டது என்று கருதப்படுகிறது என்கிறார் இவர்.

மீண்டுமாகப் பார்த்தால், பெண்ணினம் சாத்தானுக்கு தொடர்ந்து செவி கொடுத்தே வருகிறது. அன்று, ஆதாம் பெலவீனமுள்ளவனாயிருந்து ஏவாளுடைய பாவத்துக்குத் துணை போனது போல, இன்றும் ஆண்கள் பெலவீனமுள்ளவர்களாயிருந்து தவறு செய்கிறார்கள். ஆகையால், பெண்கள் தான், பிரசங்க மேடைகளில் நின்று பிரசங்கிக்கிறார்கள். தங்களைப் பிரசங்கிகளென்று தங்களுக்குத் தாங்களே சொல்லிக் கொள்கின்ற சில பெண்களை கவனித்துப் பார்த்தால், பெரும்பாலானவர்கள் தாங்கள் அளிக்கும் செய்திகளிலும், தங்கள் உடைகளிலும், தங்கள் பேச்சுக்களிலும், தீவிரத் தன்மையுடையவர்களாக இருக்கிறார்கள். அதாவது, அத்துமீறி செயல்படுகிறார்கள். ஏவாளுடைய முன்மாதிரியைப் பின்பற்றி, தேவன் பெண்களுக்கென சொல்லியிருக்கிற புத்திமதிகளுக்கு துளியும் செவி கொடுக்காமல் நடந்து கொண்டால், நிலைமை எப்படி இருக்கும்.

இல்லவே இல்லை. பெண்கள் பிரசங்கிக்கும்படி தேவனால் அதிகாரம் பெறவேயில்லை.

†

---

# ஜெபங்கள்



**சங்கீதம் 90 லிருந்து நாம் செய்ய வேண்டிய ஜெபங்கள்**

1. எங்கள் நாட்களை எண்ணும் அறிவை போதித்தருளும்...சங். 90:12
2. எங்களுக்காகப் பரிதபியும்........................................சங். 90:13
3. உம்முடைய கிருபையால் திருப்தியாக்கும்....................சங். 90:14
4. எங்களை மகிழ்ச்சியாக்கும்.......................................சங். 90:15
5. உமது மகிமை குடும்பத்தில் விளங்கட்டும்....................சங். 90:16
6. உம்முடைய பிரியம் எங்கள்மேல் இருக்கட்டும்............சங். 90:17
7. எங்கள் கைகளின் கிரியைகளை ஆசீர்வதியும்.............சங். 90:17

வாலிபர் பகுதி

# தானியேலைப் போல

Dr. **ஏபில் நாயகம்**

கிறிஸ்துவுக்குள் பிரியமான அன்பான வாலிபர்களே, உங்கள் யாவருக்கும் இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள் இந்த மாதமும் உங்களை இந்த இதழில் மூலமாக சந்திப்பது மகிழ்ச்சி. ஒவ்வொரு மாதமும் வெளிவரும் ஆலோசனைகளும் பாடங்களும் பிரயோஜனமாக இருக்கிறது என்று நம்புகிறேன். தேவனுக்கு பிரியமான வாழ்க்கையை அனைவரும் வாழ வேண்டும் அவருடைய எதிர்பார்ப்பாக இருக்கிறது. ஆனால், அதே வேளையிலே, அப்படி வாழ நாம் முற்படும் பொழுது, பல தடைகளும் சோதனைகளும், கடினமான நேரங்களும் வரவே செய்கின்றன. அப்படிப்பட்ட நேரங்களில் நமக்கு தேவனுடைய வார்த்தைகள் உதவியாக இருக்கிறது. அவைகளை வாசிக்கும் பொழுது, நமக்கு உறுதியும் நம்பிக்கையும் அளிக்கிறது. வேதபக்கங்கள் முழுவதும் இருக்கிற மனிதர்களுடைய வாழ்க்கையை நாம் பார்ப்பது பல வகைகளில் நமக்கு உதவியாக இருக்கிறது அந்த வகையிலே இந்த மாதம் நாம் தானியேல் என்ற மனிதரை குறித்து சில சில காரியங்களை கற்றுக்கொள்ள இருக்கிறோம்.

தானியேல் ஒரு வாலிபனாக இருந்த பொழுது பாபிலோனின் ராஜா யூதா தேசத்தை சிறை பிடித்துக் கொள்கிறார். சிறைபிடிக்கப்பட்ட வாலிபர்களில் சிலரை பாபிலோன் சாம்ராஜ்யத்தில் பணிபுரியும் படியாக ராஜா விரும்பி, அவர்களுக்கு பயிற்சி கொடுக்க கட்டளையிட்டார். அவர்களுக்கு, ராஜா உண்ணும் உணவு மற்றும் அவர் குடிக்கும் திராட்சை ரசமும் கொடுக்கப்பட வேண்டும் என்பது ராஜாவினுடைய உத்தரவாக இருந்தது. வாலிபர்களாக அந்நிய மண்ணில் இருந்தபோதிலும், தேவன் மீது கொண்டிருந்த நம்பிக்கையின் நிமித்தமாகவும்,அவருக்கு பயப்படுகிற பயம் இருந்தபடியினாலும் ராஜாவினுடைய போஜனத்தினாலும் திராட்சை ரசத்தினாலும் தங்களை தீட்டு படுத்தாமல் உறுதியாக இருந்தார்கள். நன்றாக நான் கவனிக்க வேண்டும். அவர்கள் வாலிபர்களாக இருந்தார்கள். அவர்களுக்கு எது சரி எது தவறு என்று போதிக்கப்பட்டிருந்தது. போதிக்கப்பட்டவைகள் தேவனுடைய கட்டளைகள் என்றும், நாம் தேவனுக்கு எப்படிப்பட்ட சூழ்நிலையிலும பயப்பட வேண்டும் என்பதிலும் உறுதியாக இருந்தார்கள். வாழ்க்கையின் சூழல் கடினமாக இருந்தாலும், தேவனுடைய ஆலோசனைகளை எந்த முழுமையாக கைக்கொள்ள வேண்டும் என்பதில் உறுதியாக இருந்திருக்கிறார் தானியேல்.

இப்பொழுது ஆறாம் அதிகாரத்திற்கு நாம் கடந்து வந்தால், 70 ஆண்டுகள் கடந்து இந்த அதிகாரத்தில் தானியேலுக்கு வயது சுமார் 80 லிருந்து 90 வரை

இருக்கும். அதற்கு மேலாகவும் இருந்திருக்க வாய்ப்பு இருக்கிறது. இப்பொழுது பாபிலோன் சாம்ராஜ்யம் வீழ்த்தப்பட்டு அதற்கு அடுத்தபடியாக எழுந்து மேதிய பெர்சிய சாம்ராஜ்யத்தின் ராஜாவின் நாட்களில் நடந்த சம்பவங்கள் அதிகாரத்தை முழுமையாக வாசிக்கும் பொழுது தானியலினுடைய சிறப்பான நடத்தையை கண்டு அவருடைய நற் பெயருக்கு களங்கம் ஏற்படுத்த வேண்டும் என்று திட்டமிடப்படுகிறது. நன்றாக கவனியுங்கள். தன்னுடைய 20 வயது தொடங்கி 90 வயது வரை பிறர் பார்த்து இந்த மனிதனுக்குள் விசேஷ ஆவி- இருக்கிறது என்று சொல்லப்படும் அளவுக்கு தன் வாழ்க்கையை நடத்தி இருக்கிறார்.

என்ன நடந்தது என்பது நம் அனைவருக்கும் தெரிந்த ஒன்று. தானியேல் எப்படியும் ராஜாவினுடைய கட்டளைக்கு கீழ்ப்படிய மாட்டார் என்று அவரை குறித்து மிகுந்த நம்பிக்கை வைத்ததினால் தான் பிரதானிகளும் தேசாதிபதிகளும் அப்படிப்பட்ட ஒரு திட்டத்தை தீட்டினார்கள். ராஜாவைத் தவிர எந்த தேவனையும் மனிதனையும் நோக்கி விண்ணப்பம் செய்யக்கூடாது என்பதுதான் அந்த திட்டம் இந்த சதி திட்டம் தானியலுக்கு கிடைத்த ஒரு நற்சான்று ஏன் என்றால் இந்த ஒரு விஷயத்தை தவிர வேறொன்றிலும் அவரை குற்றப் படுத்த முடியாது என்றும், ராஜாவின் கடுமையான உத்தரவு இருந்தாலும் எப்படியும் தானியேல் தேவனை மட்டுமே நோக்கி விண்ணப்பம் செய்வான் என்பதிலும் அவர்களுக்கு மிகுந்த நம்பிக்கை இருந்தது அப்படி என்றால் அது நற்சான்று தானே!!

தானியேல் எப்போதும் செய்து வந்ததை போலவே எருசலமை நோக்கி விண்ணப்பம் செய்தார். அதன் விளைவாக சிங்கங்களின் கெபியில் போடப்பட்டார். ஆனால் தேவன் சிங்கங்களின் வாயை கட்டி தானியலை காப்பாற்றினார். என்ன ஒரு அற்புதமான சாட்சி வாலிப வயது தொடங்கி முதிர் வயது வரை அடிமைத்தனத்தில் இருந்தாலும், தேவன் மீது கொண்டிருந்த பயமும் நம்பிக்கையும் குறையாமல் ஒரு வாழ்க்கையை வாழ்ந்து இருக்கிறார். இதைத்தான் இந்த மாதத்திற்கான பாடம் பல வேளைகளில் நம்மை சுற்றி பார்க்கும் பொழுது பலர் வழி விலகிப் போகிறதையும், பின்வாங்கி போகிறதையும் நாம் பார்க்க முடியும்.

பிரியமான வாலிபர்களை, இந்த தேவ மனிதனின் வாழ்க்கையை பார்க்கிற நீங்களும் நானும் ஒரு உறுதியை எடுத்துக் கொள்வோம். இன்றைக்கு வாலிபர்களாக இருக்கிற நாம் தானியேல் போல முதிர் வயது வரைக்கும் சாட்சி உள்ள வாழ்க்கையை, தேவனுக்கு பயப்படுகிற வாழ்க்கையை வாழ முயற்சி செய்வோம் எல்லா நிலைகளிலும் எப்படி தேவன் தானியேலுக்கு துணை நின்று உதவினாரோ அதைப்போல நமக்கும் உதவ அவர் விருப்பம் உள்ளவராய் இருக்கிறார். அந்த உறுதியோடு வாழ்வோம். தேவன் நமக்கு உதவியாளராக என்றும் இருப்பாராக.

†


சிறுவர் பகுதி

# யோனா

Dr. *பிரைய்ஸி*

ஹெலோ குழந்தைகளே !நீங்கள் அனைவரும் நன்றாக இருப்பீர்கள் என்று நம்புகிறோம்.எங்கள் கட்டுரைகளை ஒவ்வொரு மாதமும் படித்து வருகிறீர்கள் என்று நாங்கள் நம்புகிறோம்.இந்த மாதம் ஒரு தேவ மனிதனைப் பற்றி பார்ப்போம்.

அமித்தாயின் குமாரனாகிய யோனாவுக்குக் கர்த்தருடைய வார்த்தை உண்டாகி, அவர்: நீ எழுந்து மகா நகரமாகிய நினிவேக்குப் போய், அதற்கு விரோதமாகப் பிரசங்கி; அவர்களுடைய அக்கிரமம் என் சமுகத்தில் வந்து எட்டினது என்றார். அப்பொழுது யோனா கர்த்தருடைய சமுகத்தினின்று விலகி, தர்ஷீசுக்கு ஓடிப்போகும்படி எழுந்து, யோப்பாவுக்குப் போய் தர்ஷீசுக்குப் போகிற ஒரு கப்பலைக்கண்டு, கூலிகொடுத்து, தான் கர்த்தருடைய சமுகத்தினின்று விலகும்படி, அவர்களோடே தர்ஷீசுக்குப் போகக் கப்பல் ஏறினான். கர்த்தர் சமுத்திரத்தின்மேல் பெருங்காற்றை வரவிட்டார்; அதினால் கடலிலே கப்பல் உடையுமென்று நினைக்கத்தக்க பெரிய கொந்தளிப்பு உண்டாயிற்று. அப்பொழுது கப்பற்காரர் பயந்து, அவனவன் தன்தன் தேவனை நோக்கி வேண்டுதல்செய்து, பாரத்தை லேசாக்கும்படிக் கப்பலில் இருந்த சரக்குகளைச் சமுத்திரத்தில் எறிந்துவிட்டார்கள்; யோனாவோவென்றால் கப்பலின் கீழ்த்தட்டில் இறங்கிபோய்ப் படுத்துக்கொண்டு, அயர்ந்த நித்திரைபண்ணினான். அவர்கள் யார் நிமித்தம் இந்த ஆபத்து நமக்கு நேரிட்டதென்று நாமறியும்படிக்குச் சீட்டுப்போடுவோம் வாருங்கள் என்று ஒருவரோடொருவர் சொல்லிக்கொண்டு சீட்டுப்போட்டார்கள்; யோனாவின் பேருக்குச் சீட்டு விழுந்தது.பின்பு யோனாவை எடுத்துச் சமுத்திரத்திலே போட்டுவிட்டார்கள்; சமுத்திரம் தன் மும்முரத்தைவிட்டு அமர்ந்தது. யோனாவை விழுங்கும்படி ஒரு பெரிய மீனைக் கர்த்தர் ஆயத்தப்படுத்தியிருந்தார்; அந்த மீன் வயிற்றிலே யோனா இராப்பகல் மூன்றுநாள் இருந்தான்.



அன்பு பிள்ளைகளே! பின்னர் என்ன நடந்தது என்பதை யோனா புத்தகத்தில் அடுத்த அதிகாரங்களைப் படிக்கும்போது தெரிந்து கொள்ளலாம். அன்பான குழந்தைகளே, யோவான் நினைத்தது போல கர்த்தருடைய சமுகத்தினின்று நாம் ஒருபோதும் விலக முடியாது. மேலும் தேவனும் அவருடைய வார்த்தைக்கும் எதிராக பாவம் செய்வதால் ஏற்படும் விளைவுகளையும் நாம் சந்திக்க வேண்டியிருக்கும். நாம் மனந்திரும்பினால், அவர் நம்முடைய ஜெபங்களைக் கேட்பார்.

அன்புள்ள குழந்தைகளே, தேவனின் கண்களிலிருந்து உங்களால் தப்ப முடியாது என்பதை உணரும் நேரம் இது. உங்கள் வழிகளைச் சரிசெய்து, யோனாவைப் போல் பரலோகத்திலுள்ள நம் பிதாவிடம் மனந்திரும்புங்கள்.

**With love**
**Praisey akka**

†

## கர்த்தர் யாரை, கைவிடமாட்டார்?

*1. நீதிமானை - (சங் 37:25).*

*2. கர்த்தரை தேடுகிறவர்களை - (சங் 9:10)*

*3. பரிசுத்தவான்களை - (சங் 37:28)*

*4. தம்முடைய ஜனத்தை -(சங் 94:14)*

*5. சிறுமையும் எளிமையுமானவனை - (ஏசா 41:17)*

*6. கர்த்தரை தன் தேவனாக கொண்டவர்களை - (உபா 4:31)*

†

# எபிரெயர் 2 ஆம் அதிகாரம்

*Bro.V. ஆசீர்வாதம், சென்னை*

(சென்ற மாத இதழின் தொடர்ச்சி...)

**தேவனுடைய சாட்சி**

1. ஞானஸ்நானம் பெற்றபோது, அப்போஸ்தலருடைய கைகள் மூலமாய் ஆவியின் அற்புத வரங்கள் கொடுக்கப்பட்டன (அப்.19:5-6). எத்தியோப்பியா மந்திரிக்கு பிலிப்பு ஞானஸ்நானம் கொடுத்தப் பின்பு ஆவியானவர் பிலிப்புவைக் கொண்டுபோய் விட்டார் (அப். 8:36-39).
2. கர்த்தருடைய பந்தியைக் கைக்கொள்ளும்போது, மரித்த ஐத்திகு உயிர்ப்பிக்கப்பட்டான் (அப். 20:7-13).
3. சபையார் ஜெபித்தபோது, அவர்கள் கூடியிருந்த இடம் அசைந்தது (அப்.4:23-31).
4. பவுலும், சீலாவும் பாடியபோது, சிறைச்சாலை அசைந்தது (அப். 16:24-30).
5. அனனியா, சப்பீராள் கர்த்தருக்கென்று நியமித்துக் கொண்டதில் வஞ்சனை செய்தபடியால் மரணமடைந்தார்கள் (அப். 5:1-11). இவ்வாறு உபதேசங்கள் நிறைவேறும்போது, தேவன் சாட்சி கொடுத்து அதை உறுதிசெய்தார்.

**2:5 இனிவரும் உலகத்தைக்குறித்துப் பேசுகிறோமே, அதை அவர் தூதர்களுக்குக் கீழ்ப்படுத்தவில்லை.**

2:5 தேவன் தம்முடைய சிருஷ்டிப்பைத் தேவதூதர்களுக்குக் கீழ்படுத்தவில்லை. ஏற்கனவே சிருஷ்டிக்கப்பட்ட உலகமானாலும் சரி, இனி நாம் சுதந்தரித்துக் கொள்ளப்போகிற பரலோகமானாலும் சரி தேவ தூதர்களுக்கு அதை கீழ்ப்படுத்தவில்லை.

**2:6 ஒரு இடத்திலே ஒருவன் சாட்சியாக: மனுஷனை நீர் நினைக்கிறதற்கும், மனுஷனுடைய குமாரனை நீர் விசாரிக்கிறதற்கும் அவன் எம்மாத்திரம்?**

2:6 மனுஷனை தேவன் நினைத்துப்பார்ப்பதற்கு மனிதன் எம் மாத்திரம்? மனித சமுதாயத்தை (மனுக்குலத்தை) நோக்கிப் பார்ப்பதற்கு அவர்கள் எம்மாத்திரம்? (சங். 8:4). மனிதன் புழுதியில் அஸ்திபாரம் போடப்பட்டு, மண் வீடுகளில் வாசம் பண்ணி, பொட்டுப் பூச்சியால் அரிக்கப்படுகிறவனாய் காணப்படுகிறான் (யோபு 4:19). மேலும், யோபு 25:6ல் மனிதன் புழுவாகவும், பூச்சியாகவும் காணப்படுகிறான். மேலும், ஏசா. 40:15,17ல் மனிதன் தராசிலே படிகிற தூசிக்கு ஒப்பாகவும், பூஜ்யத்திலும் பூஜ்யமாகவும் இருக்கிறான். இப்படிப்பட்ட மனிதன் மேல்

தேவன் நம்பிக்கை வைப்பது எப்படி? ஆனாலும், தேவன் மனிதனை எந்த அளவிற்கு உயர்த்தி வைத்திருந்தார் என்பதை கீழ்க்கண்ட வசனங்களில் காண்கிறோம்.

**2:7-8 அவனை தேவதூதரிலும் சற்றுச் சிறியவனாக்கினீர், மகிமையினாலும் கனத்தினாலும் அவனுக்கு முடிசூட்டி, உம்முடைய கரத்தின் கிரியைகளின்மேல் அவனை அதிகாரியாக வைத்து, சகலத்தையும் அவனுடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தினீர் என்று சொன்னான்.**

2:7-8 சகலத்தையும் அவனுக்குக் கீழ்ப்படுத்தினார் என்கிற விஷயத்தில், அவர் அவனுக்குக் கீழ்ப்படுத்தாத பொருள் ஒன்றுமில்லை அப்படியிருந்தும், இன்னும் அவனுக்குச் சகலமும் கீழ்ப்பட்டிருக்கக் காணோம்.

a. மனிதனை தேவதூதரிலும் சற்று சிறியவனாக்கினீர். அதாவது, சிருஷ்டிப்புகளில் தேவதூதர்களுக்கு அடுத்தபடியாக மனிதன் இருக்கிறான்.

b. மகிமையினாலும், கனத்தினாலும் அவனை முடிசூட்டினார்.

C. தம்முடைய கரத்தின் கிரியைகளுக்குமேல் மனிதனை அதிகாரியாக்கினார். மனிதனுக்கு தேவன் ஆளுகையை ஏற்படுத்தினார். ஆதி. 1:28ல் வானத்தின் பறவைகளையும், கடலின் மச்சங்களையும், (மீன்கள்) நடமாடும் ஜீவ ஜந்துக்களையும் ஆண்டுகொள்ளுங்கள் என்றுச்சொல்லி, அவைகளுக்குமேல் மனிதனை அதிகாரியாக வைத்தார்.

d. சகலத்தையும் மனிதனுடைய பாதங்களுக்குக் கீழ்படுத்தினார். வானத்தின் பறவைகளும், கடலின் மச்சங்களும், நடமாடும் ஜீவ ஜந்துக்களும், மனிதனுடைய சொல்படி கேட்டு, அவனுக்குக் கீழ்படிந் திருக்கும்படி நிர்ணயம் செய்யப்பட்டிருந்தது. யாக். 3:7ன்படி, இவைகள் எல்லாம், மனித சுபாவத்தால் அடக்கப்படும், அடக்கப்பட்டதுமுண்டு. மனிதனுக்குக் கீழ்ப்படுத்தாதப் பொருள் ஒன்றுமில்லை. தேவன் மனிதனை நேசித்து, தாம் சிருஷ்டித்தவைகளை யெல்லாம் அவனுக்குக் கீழ்படுத்தினார். அப்படியிருந்தும், அவனுக்கு சகலமும் கீழ்ப்பட்டிருக்க காணோம். ஏனென்றால், மனிதன் தன்னுடைய அந்தஸ்தை இழந்தான். ரோமர் 3:23ன்படி பாவம் செய்து, தேவன் கொடுத்த மகிமையை இழந்துபோனான். தேவனால் கொடுக்கப்பட்ட மகிமையையும், கனத்தையும், அந்தஸ்தையும் மனிதன் இழந்துப் போனபடியினாலும், அவன் நிமித்தமாக பூமி சபிக்கப்பட்டதினாலும் எல்லா ஜீவராசிகளும், அவனை விரோதியைப் போலப் பார்க்கிறது. காட்டு மிருகங்கள் மனிதனை கொன்றுபோட வேண்டுமென்று அவனுக்கு எதிராக துணிந்து நிற்கிறது. கடலின் மீன்கள் மனிதனைக் கண்டு ஆழத்திற்கு ஓடிப்போகிறது. பறவைகள் மனிதனைக் கண்டு உயரே பறந்துவிடுகிறது. இப்படி அடங்கிப்போக வேண்டியவைகள் எல்லாம் அடங்கிப்போகவில்லை.

**2:9 என்றாலும், தேவனுடைய கிருபையினால் ஒவ்வொரு வருக்காகவும், மரணத்தை ருசிபார்க்கும்படிக்கு தேவதூதரிலும் சற்றுச்**

**சிறியவராக்கப்பட்டிருந்த இயேசு மரணத்தை உத்தரித்ததினிமித்தம் மகிமையினாலும் கனத்தினாலும் முடி சூட்டப்பட்டதைக் காண்கிறோம்.**

2.9 11கொரி. 5:14ல் எல்லா மனிதர்களுக்காகவும் ஒருவரே மரித்தார்.

**1. எபி. 2:9ன்படி ஒவ்வொருவருக்காகவும் மரணத்தை ருசிப்பார்த்தார்.**

ஒவ்வொருவருக்காகவும் இயேசுவானவர் மரித்தும், மரணத்தை ருசிப்பார்த்ததும் தேவனுடைய கிருபையாகும். இயேசுவானவர் மரித்த தினாலே மரணபரியந்தம் கீழ்ப்படிந்தவராய், அதாவது சிலுவையின் மரணபரியந்தம் கீழ்ப்படிந்தவராய் மரணத்தை ஏற்றுக்கொண்டதினாலே எல்லாவற்றிற்க்கும் மேலாக உயர்த்தப்பட்டார் (பிலி, 2:7-9), கீழ்ப்படி யாமையுள்ள மனிதனுக்காக கீழ்ப்படிதலுள்ள மனிதனாக, இயேசு மரித்ததினாலே மகிமையினாலும், கனத்தினாலும் முடிசூட்டப்பட்டார். நம்முடைய விசுவாசமும், நம்பிக்கையும் தேவன்மேல் இருக்கும்படி இயேசுவை தேவன் மரித்தோரிலிருந்து எழுப்பி, அவருக்கு மகிமையைக்கொடுத்தார் (1பேதுரு. 1:21). யோவான். 17:22ன்படி இயேசு வானவர் தனக்குக்கொடுத்த மகிமையை நமக்குக்கொடுத்தார். கிறிஸ்துவுக்குள் எவர்கள் அழைக்கப்பட்டார்களோ, அவர்கள் நீதிமான்களாக்கப்பட்டு, மகிமைப்படுத்தப்படுகிறார்கள் (ரோ.8:30). அந்தப்படி, நம்முடைய ஜீவனாகிய கிறிஸ்து வெளிப்படும்போது, அவரோடுகூட நாமும் மகிமையிலே வெளிப்படுவோம். இவ்விதமாக மனிதன், தான் இழந்த மகிமையை கிறிஸ்துவுக்குள் மீண்டும் பெறுகிறான்.

**11. தேவதூதரிலும் சற்று சிறியவராக்கப்பட்டார்...**

எபி. 1:4ல் இயேசுவானவர் தேவதூதரிலும் மேலானவர் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், எபி. 2:9ல் தேவ தூதரிலும் சற்று சிறியவராக்கப்பட்ட இயேசு என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஒரு இடத்தில் பெரியவராகவும், இன்னொரு இடத்தில் சிறியவராகவும் சொல்லப்பட்டிருப்பது குழப்பத்திற்கு காரணமல்ல. எபி. 2:7ல் மனிதனை தேவன் தேவதூதரிலும் சற்று சிறியவராக்கினார். அந்த மனித உருவத்தில் இயேசுவானவர் உலகத்துக்கு வந்தபடியினாலே அவரும் மனிதனுக்கு சமமானவராய் தேவதூதரை விட சற்றுசிறியவராக்கப்பட்டார். இதிலே விளங்கும் உண்மை என்னவென்றால்,பரலோகத்தில் தேவ குமாரனாயிருந்த இயேசுவானவர் பரலோகத்திற்குரிய தன்மைகளோடு உலகத்திற்கு வராமல், மனித தன்மையோடு மனிதனுக்கு ஒப்பானவராய் வந்தார் என்பதை தெரியப்படுத்தும்படிக்கு, அவர் தேவதூதரிலும் சற்று சிறியவராக்கப்பட்டார் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

**111. மரணத்தை வெற்றி கொண்டதினால்..**

இயேசுவானவர், மரணத்தை வெற்றிக்கொண்டதினால் மகிமையினாலும் கனத்தினாலும் முடிசூட்டப்பட்டதுமல்லாமல் மீண்டும் தேவதூதர்களுக்கு மேலானவராக உயர்த்தப்பட்டார். ஆகையால்,

இயேசுவானவர் யோவா. 17:5ல் பிதாவே உலக தோற்றத்திற்கு முன் உம்மிடத்தில் எனக்கு உண்டாயிருந்த மகிமையினாலே இப்பொழுது நீர் என்னை உம்மிடத்தில் மகிமைப்படுத்தும் என்று ஜெபிக்கிறார்.

**2:10 ஏனென்றால் தமக்காகவும் தம்மாலேயும் சகலத்தையும் உண்டாக்கினார், அநேகம் பிள்ளைகளை மகிமையில் கொண்டு வந்து சேர்க்கையில் அவர்களுடைய இரட்சிப்பின் அதிபதியை உபத்திரவங்களினாலே பூரணப்படுத்துகிறது அவருக்கேற்றதாயிருந்தது.**

2:10. தேவன் தம்முடைய சித்தத்தின்படியே இயேசு கிறிஸ்துவைக் கொண்டு, தம்முடைய மகிமைக்காகவும், குமாரனுடைய ஆளுகைக் காகவும் எல்லாவற்றையும் சிருஷ்டித்தார். அநேகம் பிள்ளைகளை மகிமையில் சேர்த்துக்கொள்ள விரும்புகிறார். அநேகம் பிள்ளைகளை மகிமைக்குள் வழிநடத்துகிற அதிபதியை அதாவது இரட்சிப்பின் அதிபதியை உபத்திரவப்படுத்தி, உபத்திரவங்களினாலே இரட்சிப்பின் அதிபதி பூரணப்படவேண்டும் என்பது தேவனுக்கு ஏற்றதாயிருந்தது. இயேசுவானவர், குமாரனாக இருந்தும் பட்டபாடுகளினாலே கீழ்ப்படிதலைக் கற்றுக்கொண்டார். தாம் பூரணரான பின்பு, தமக்கு கீழ்ப்படிகிற யாவரும் நித்திய இரட்சிப்பை அடைவதற்கு இயேசு காரணமானார் (எபி. 5:8-9). மேலும், சகல பரிபூரணமும் கிறிஸ்துவுக்குள் வாசமாய் இருக்க வேண்டும் (கொலோ.1:19).

எபி. 7:28ன்படி கிறிஸ்து என்றென்றைக்கும் பூரணரான குமாரனாக இருக்கிறார். எபி. 9:12ன்படி தம்முடைய சொந்த இரத்தத்தினாலே நித்திய மீட்பை உண்டுபண்ணினார். அதாவது, பரிபூரணமான இரட்சிப்பை ஏற்படுத்தினார். ஏனெனில், பரிசுத்தமாக்கப் படுகிறவர்களை ஒரே பலியினாலே என்றென்றைக்கும் பூரணப் படுத்துகிறார் (எபி.9:14). கொலோ. 2:10ன்படி கிறிஸ்துவுக்குள் நாமெல்லாரும் பரிபூரணமுள்ளவர்களாய் இருக்கிறோம். இவ்விதமாய் எல்லாவற்றையும் பூரணப்படுத்தின தேவன் நம்மையும் பூரணப்படுத்தும் படிக்கு, நம்முடைய அதிபதியாகிய இயேசுவை முதலாவது தேவன் உபத்திரவங்களைக்கொண்டு பூரணப்படுத்தினார்.

**2:11-13 எப்படியெனில், பரிசுத்தஞ்செய்கிறவரும் பரிசுத்தஞ் செய்யப்படுகிறவர்களுமாகிய யாவரும் ஒருவராலே உண்டா யிருக்கிறார்கள் இதினிமித்தம் அவர்களைச் சகோதரரென்று சொல்ல அவர் வெட்கப்படாமல்:**

**உம்முடைய நாமத்தை என் சகோதரருக்கு அறிவித்து, சபை நடுவில் உம்மைத் துதித்துப் பாடுவேன் என்றும் நான் அவரிடத்தில் நம்பிக்கையாயிருப்பேன் என்றும் இதோ, நானும், தேவன் எனக்குக் கொடுத்த பிள்ளைகளும் என்றும் சொல்லியிருக்கிறார்.**

2:11-13. பரிசுத்தம் செய்கிறவர் இயேசுவானவர். பரிசுத்தமாக்கப் படுகிறவர்கள் மனிதர்கள். இயேசுவானவரும், மனிதர்களும் ஒரே

இரத்தத்தினாலே உண்டாக்கப்பட்டவர்களாய் இருக்கிறார்கள். இயேசு வானவரும், மனிதர்களும் இரத்த சம்பந்தமான உறவில் ஆதாமோடு இணைக்கப்படுகிறார்கள். அதாவது, ஆதாமின் இரத்த சம்பந்தப்பட்டவர்களாய் இருக்கிறார்கள். ஆவிக்குரிய வகையில் தேவனுடைய பிள்ளைகளாய் இருக்கிறார்கள். இவ்வாறு மாம்சத்துக்குரிய வகையிலும், ஆவிக்குரிய வகையிலும், இயேசுவானவர் மனித சமுதாயத்தோடு ஒன்றுப்பட்டிருப்பதால், அவர்களை சகோதரர்கள் என்றுச்சொல்ல அவர் வெட்கப்படவில்லை.

மேலும், சங். 22:22ல் இயேசு சொன்னதாக, இயேசுவானவர் பிறப்பதற்கு ஏறக்குறைய 1000 ஆண்டுகளுக்கு முன்பாக தாவீது பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டவனாய் இதை முன்னறிவித்தான். இதில் இயேசுவானவர் உம்முடைய (பிதாவினுடைய) நாமத்தை என் சகோதரக்கு, அறிவிப்பேன் என்று சொல்லியிருக்கிறார். நாமத்தை என்பது தேவனுடைய அதிகாரத்தை குறிக்கும். யோவான். 17:6ல் உம்முடைய நாமத்தை அவர்களுக்கு வெளிப்படுத்தினேன் என்று சொன்னார். அதாவது, இயேசுவானவர் அப்போஸ்தலருக்கு பிதாவின் அதிகாரத்தை வெளிப்படுத்தினார். யோவான். 17:7ன்படி, இயேசு வானவருக்கு கொடுக்கப்பட்டதெல்லாம் பிதாவினால் உண்டானது என்று அப்போஸ்தலர்கள் அறிந்திருக்கிறார்கள். அதைதான், இயேசு வானவர் உம்முடைய நாமத்தை அவர்களுக்கு வெளிப்படுத்தினேன் என்று சொன்னார்.

✝

---

## இயேசுவைக் காண ஆவலாயிருந்து கண்டவர்கள்

- ✶ சிமியோன் (லூக்கா 2 : 32).
- ✶ பெத்லகேம் மேய்ப்பர்கள் (லூக்கா 2 : 20)
- ✶ ஆயக்காரன் சகேயு (லூக்கா 19 : 8)
- ✶ ஏரோது (லூக்கா 23 : 8)
- ✶ சாஸ்திரிகள் (மத் 2 : 11)

# வேதாகமம் – மனிதனுக்கு அளிக்கப்பட்ட பூரணமான திட்டம்

*தமிழில். Bro. D. சாமுவேல் ராஜ், சத்தி*

(சென்ற மாத இதழின் தொடர்ச்சி...)




தேவன் கூறிய இந்த உபதேசத்தை உங்கள் முன்னோர்கள் பொதுவாகப் பின்பற்றிய காரணத்தினால்தான், நீங்கள் பசியுடனோ அல்லது ஊட்டச்சத்து குறைவாகவோ இல்லாமல், போதுமான உடல் நலத்துடன் இந்தப் பாடத்தை நீங்கள் படிக்கக் கூடியவராக இருக்கிறீர்கள் என்பது உண்மையாகும்.

சுத்தமற்றவையாக இருந்த காரணத்தினால் சில பொருட்களை தான் உண்பதில்லை என பேதுரு கர்த்தரிடம் கூறினார். அப்போஸ்தலருடைய நடபடிகள் 11:8,9 வசனங்களில் நாம் படிக்கிறோம். தேவன் சுத்தமாக்கினவைகளை நீ தீட்டாக எண்ணாதே என்று இச்சமயத்தில் அவனுக்கு தேவன் பதிலளித்தார். தேவன் உண்டாக்கியிருந்த சகல பொருட்களும் மனிதன் சாப்பிடுவதற்காகத்தான். எனவே, இந்தக் கிரகத்தில் மனிதன் பட்டினியோடியிருக்கத் தேவையில்லை என்றும். இவ்வாறு செய்ததின் மூலமாக பேதுருவுக்கும், நமக்கும் கூட தேவன் உத்தரவிட்டார்.


அடுத்து தேவன் ஏற்படுத்திய திருமண முறையானது தேவனுடைய தெய்வீகத்தன்மைக்கு மற்றும் ஓர் எடுத்துக்காட்டாக விளங்குகிறது. இன்றைய நாட்களில், உலகின் பல நாடுகளில், ஒரு கணவன் பல மனைவிகளை வைத்துக் கொள்வது ஒரு மத வழக்கமாக உள்ளது. அந்தப்புற பெண்களை அமர்த்திக் கொள்வது பற்றி நாம் அனைவரும் கேள்விப்பட்டிருப்போம். நீங்கள் ஒரு இளம் பெண்ணாக இருந்து உங்கள் கணவனுக்குள்ள 25 மனைவிமார்களில் நீங்களும் ஒருத்தி என்ற நிலை இருந்தால் உங்களுக்கு எப்படி இருக்கும்? ஒரு மனைவி பல கனவர்களை வைத்துக் கொள்ளலாம் என்று இன்றும் சில இடங்களில் உள்ள பிற மதங்கள் கற்பிக்கின்றன. ஒரு மனைவியின் 9 அல்லது 10 கணவன்மார்களில் ஒருவராக இருப்பதை நீங்கள் எவ்வாறு விரும்புவீர்கள்?

ஒரு ஆன் அல்லது ஒரு பெண், ஒன்றுக்கு மேற்பட்ட மனைவி அல்லது கணவனை ஏற்றுக்கொள்ளும் பழக்கத்தால் ஏற்படும் பிரச்சனைகளிலிருந்து

மனிதனுக்கு விடுதலை அளிக்க, நடைமுறைக்கு ஏற்ற ஒரு திட்டத்தை தேவன் தாமே இயேசு கிறிஸ்து மூலமாக மனிதனுக்கு அளித்தார்.




மாற்கு 10ம் அதிகாரம் 6 முதல் 9 வசனங்கள் வரை, இயேசு கூறுகிறார்: ஆகிலும், ஆதியிலே மனிதரைச் சிருஷ்டித்த தேவன் அவர்களை ஆணும் பெண்ணுமாக உண்டாக்கினார். இதன் நிமித்தம், புருஷனானவன் தன் தகப்பனையும் தாயையும் விட்டுத் தன் மனைவியோடு இசைந்திருப்பான். அவர்கள் இருவரும் ஒரே மாம்சமாயிருப்பார்கள். இவ்விதமாய் அவர்கள் இருவராயிராமல் ஒரே மாம்சமாயிருக்கிறார்கள். ஆகையால், தேவன் இணைத்ததை மனிதன் பிரிக்காதிருக்கக்கடவன் என்றார். ஒருவனுக்கு ஒருத்தி என்ற தேவ திட்டத்தில் அன்பான கணவன் மனைவியாக சேர்ந்து வாழும் ஒரு அமைப்பை விட சிறந்த முறை வேறு ஒன்றும் கிடையாது.



மனிதனுக்கு தேவன் தந்த முழுமையான திட்டத்திற்கு மற்றுமோர் உதாரணம், தேவனுக்கும் மனிதனுக்கும் இடையே நிலவும் உறவில் காணப்படுகிறது. இன்று உலகிலுள்ள பல மதங்களில் உள்ள மக்கள் நீண்ட புனித யாத்திரைகளைச் செய்யக் கடமைப்பட்டவர்களாக இருக்கின்றனர். முஸ்லீம் மதப் போதனையில் அவர்களால் முக்கிய இடமாகக் கருதப்படும் மெக்காவுக்கு மக்கள் பயணப்பட்டு போவதைநீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள். புத்தருக்கு பிரம்மாண்டமான தங்கச் சிலைகளை மக்கள் எழுப்பியிருப்பதையும்நீங்கள் கேள்விப்பட்டிருக்கலாம். பெரிய பெரிய கோவில்களையும், கோபுரங்களையும் உருவாக்கி தங்கள் பணத்தையும் காலத்தையும் கடவுளைத் தொழுதுகொள்ள செலவழிக்கின்றனர் என்பதையும் நீங்கள் அறிந்திருக்கிறீர்கள். இயேசுகிறிஸ்து அளித்த முறை இவற்றுக்கு முற்றிலும் மாறுபாடானது.

மத்தேயு 18:20ல் நமக்குச் சொல்லப்பட்டுள்ளது. ***ஏனெனில் இரண்டு பேராவது மூன்று பேராவது என் நாமத்தினாலே எங்கே கூடியிருக்கிறீர்களோ, அங்கே அவர்கள் நடுவிலே இருக்கிறேன்*** என்றார். இயேசுவைத் தொழுதுகொள்ள பெரிய கட்டிடங்களோ, தங்கச் சிலைகளோ அல்லது நீண்ட யாத்திரைகளை மேற்கொள்ளவோ

தேவையில்லை என்று அவர் நமக்குக் கூறுகிறார். தேவனை தொழுதுகொள்வது நமது சொந்தக் காரியம், அதை நாம் தேர்ந்தெடுக்கும் எந்த இடத்திலும் செய்து கொள்ளலாம்.



1 கொரிந்தியர் 3:16ல் நாமும், நமது சரீரங்களும், ஆராதனை செய்யக் கூடிவரும் ஒவ்வொரு கிறிஸ்தவரும் தேவனுடைய ஆலயமாக இருக்கிறோம் என நமக்குச் சொல்லப்பட்டுள்ளது. தேவன் ஒரு அன்பான தேவனாக இருக்கிறார். சுதந்திரமாகவும் நமது சொந்த தனிப்பட்ட வழியிலும் அவரைத் தொழுதுகொள்ள அவர் நம்மை அனுமதிக்கிறார். நமது தோலின் நிறம் என்ன என்பதோ, ஆணா அல்லது பெண்ணா என்பதோ, நாம் எவ்வளவு பணம் சம்பாதிக்கிறோம் என்பதோ அல்லது என்ன மொழி பேசுகிறோம் என்பதோ முக்கியமே அல்ல. நாம் அனைவரும் தேவனை சரிசமமாக தொழுது கொள்ளலாம். நாம் அனைவரும் தனித்தனியாகவும் அவரிடம் ஜெபிக்கலாம். அவரை எவ்வாறு தொழுதுகொள்ள வேண்டும் என்ற அடிப்படை முறை மட்டும் வேதாகமத்தில் கொடுக்கப்பட்டுள்ளது. நாம் ஆராதிக்க வேண்டிய இடத்தையும் எந்நிலைகளில் தொழுது கொள்ளப் போகிறோம் என்பதையும் நாம் ஒவ்வொருவரும் தேர்ந்தெடுக்க அனுமதிக்கப்பட்டுள்ளோம்.

வேதாகமம் வர்ணிக்கும் தேவன், உங்கள் பேரில் அக்கறையுள்ள, ஒரு தனிப்பட்ட சொந்த தேவன். இயேசு கூறினார்: ***இதோ, வாசற்படியிலே நின்று தட்டுகிறேன். ஒருவன் என் சத்தத்தைக் கேட்டு கதவைத் திறந்தால், அவனிடத்தில் நான் பிரவேசித்து, அவனோடு போஜனம்பண்ணுவேன், அவனும் என்னோடு போஜனம்பண்ணுவான்.*** (வெளி 3: 20) நீங்கள் அவருடைய அருகில் வரவும், அவர் கூறியது போல தொழுது கொள்ளவும், இயேசு உங்கள் இதயக்கதவை தட்டிக்கொண்டிருக்கிறார். உங்கள் பிரச்சினைகளைத் தீர்ப்பதிலும், அவருடன் நெருங்கிய உறவை நீங்கள் ஏற்படுத்திக்கொள்வதிலும் உமக்கு உதவி செய்ய அவர் விரும்புகிறார். யோவான் 10: 14-18 வசனங்களில், இயேசு தம்மை மேய்ப்பனாகவும். நம்மை அவருடைய மந்தையாகவும் சித்தரிப்பதின் மூலம் மீண்டுமாக நமக்கு வழிகாட்டி நம் பேரில் அக்கறை செலுத்துகிறார். நம் மேலும் நமது பிரச்சினைகளின் மேலும் அக்கறையற்ற ஒரு தேவன் நமக்கு இல்லை. நமது பிரச்சினைகளைத் தீர்ப்பதில் நமக்கு உதவ விரும்பும், உதவக்கூடிய ஒரு தனிப்பட்ட சொந்த தேவனை நாம் உடையவர்களாக இருக்கிறோம்.

தேவனுடைய திட்டமானது நமது அனைத்துத் தேவைகளையும் சந்திக்கக்கூடியதாகவும், நம்மில் ஒவ்வொருவருக்கும் பூரணமானதாகவும் இருப்பதை அறிந்து கொள்ளுவது எவ்வளவு மகத்தான காரியமாக இருக்கிறது! இயேசுவின் அழகிய ஒளிக்குள் நம்மை நடத்துவதற்கு மாறாக, மனிதன் உண்டாக்கிய மதங்கள் பல ஆயிரக்கணக்கான மக்களை வறுமையிலும், அடிமைத்தனத்திலும் ஆழ்த்துவது எத்தகைய மாறுபாடான காரியமாக இருக்கிறது!

தேவனுடன் உங்களுடைய உறவு என்ன? தம்முடைய குமாரன் இயேசுகிறிஸ்துவை அனுப்பி, உங்களுக்காக அவர் செய்துள்ள சகல காரியங்களுக்காகவும் தேவனுக்கு நீங்கள் நன்றியுள்ளவராக இருக்கிறீர்களா?

†

---

## எபேசியர் 5:16 ன் விளக்கம்



**நாட்கள் பொல்லாதவைகளானதால் காலத்தை பிரயோஜனப்படுத்திக் கொள்ளுங்கள் என்று தேவன் சொல்கிறார். நம் எல்லோருக்கும் ஒரே விதமாகத்தான் நேரம் அதாவது 24 மணி நேரம் உலகத்தை உண்டாக்கின தேவனால் தரப்படுகிறது. இன்னும் சொல்லப்போனால் இவ்வுலகிலுள்ள எல்லோருக்கும் ஒரே மாதிரியாக அல்லது சமமாக கிடைக்கும் ஒன்று இந்த நேரம் மட்டும்தான். அதை தேவனுக்காக பயன்படுத்துவதா அல்லது உலகத்திற்காக பயன்படுத்துவதா? என்பது நம் கையில்தான் இருக்கிறது**

# மது, மாது, சூது

*Bro. பாண்டியன்*

**தே**வன் மனிதனை தமது சாயலாக நல்லறிவோடே படைத்திருந்தும் பிசாசானவன் தந்திரத்தால் மனுக்குலம் பாவத்தில் விழுந்து போனதை நாம் அறிவோம். இழந்து போனதைத் தேடவும் திருப்பிக் கொடுக்கவும் தேவக்குமாரன் வந்தார். ஆரம்பத்தில் ஏதேன் தோட்டத்தில் ஆரம்பித்த வஞ்சகம் இன்றும் தொடர்கிறது என்பதே உண்மை. உலகம் கிறிஸ்துவை அசட்டை செய்து இந்த பாவங்களில் வீழ்ந்து கிடக்கின்றது. ஆனால், நாமும் அப்படி ஆகாதபடிக்கு பிசாசின் தந்திரங்களோடே எதிர்க்க திராணியுள்ளவர்களாய் இருக்க வேண்டும் ( எபே 6:11 ). அநேகர் சிக்குண்டு சீரழிகிற மது, மாது, சூது என அடுக்கு மொழியில் இந்த உலகத்தார் சொல்கிற பாவங்களைக் குறித்த வேத ஆலோசனைகளைப் பார்ப்போம்.



***முதலாவது,*** மதுபானம் எனச் சொல்லப்படுகிற போதை வஸ்துக்கள். புகையிலை, குட்கா, கஞ்சா, போதை மாத்திரைகள், போதை ஊசி என வித விதமாக ஜனங்களை சீரழிக்கின்ற காரியங்களை செய்திகளில் நாம் பார்க்கிறோம். சமுதாயத்தைக் கெடுக்கிற இவைகளை ஒழிக்க அநேகர் முயற்சி செய்கின்றனர். ***Say no to drugs*** என ஆங்கிலத்தில் போதனை செய்கிறார்கள். ஒரு மனிதன் இன்னொரு மனிதனுடைய போதனையைக் கேட்டு திருந்த முடியாது. அதற்கு தேவ பயமும், வேத வார்த்தைகளும் தேவைப்படுகிறது. பெற்றோர் பிள்ளைகளை நல்லொழுக்கத்தில் வளர்க்க முதலாவது அவர்கள் தேவனுக்கு பயந்து வாழ வேண்டும். (1தீமோ.3:4,8) உலகம் மதுபானத்தை ஒரு பொழுதுபோக்காகப் பார்க்கிறது. ஆனால், வேதம், ***மதுபானத்தால் மயங்குகிற ஒருவனும் ஞானவானல்ல*** (நீதி 20:1) என்கிறது. அதில் மயங்குகிறவன் அமளி பண்ணுகிறான் என்றும் அவன் தன் மனைவியை விட்டு வேறு ஒன்றை நாடத் தூண்டும். மேலும், வேதனை, துக்கம், சண்டைகள் என அதின் கேடுகளை வேதம் எச்சரிக்கின்றது. (நீதி 23: 29-35) முடிவில் அடிமைப்படுத்திவிடுகிறது எனப் பார்க்கிறோம். ரேகாபியர் என்கிற தேவனை அறியாத ஜனம் தங்கள் மூத்தோர் சொல்கேட்டு மதுபானம் தவிர்த்தார்கள்.

ஆனால், தேவனை அறிந்தவர்கள் கூட இந்த மதியீனத்தை செய்கிறதை வேதம் கண்டிக்கின்றது. ஆண்டவர் இயேசு லூக் 21 : 34ல் அதை ஒரு வெறி என்று எச்சரிக்கின்றார். பவுலும் எபே 5 : 18 ***மதுபான வெறி கொள்ளாமல்*** என்று கட்டளையிடுகிறார். சிறைபிடிப்பில் அந்நிய நாட்டில் கூட தானியேல் உட்பட தேவனுக்கு பயந்த வாலிபர்கள் இந்த மதுபானத்தால் தங்களைத் தீட்டுப் படுத்தாதபடிக்கு காத்துக் கொண்டார்கள். ஆகவே, இதற்கு விலகி நம்மைக் காத்துகொள்வோமாக.



***இரண்டாவதாக,*** மாது என்கிற தவறான பெண்களின் சகவாசம். வாலிபர்கள் இதன் ஆபத்து அறியாமல் அடிக்கப்படும் ஆடு போல இதில் சிக்கி மாள்கிறார்கள். மனைவியின் பேச்சு கசந்தாலும் முடிவு நிம்மதியாயிருக்கும் – தேன் போல பேசும் பரஸ்திரீயின் செய்கைகள் நீ ஜீவ மார்க்கத்தை சிந்தியாதபடி தேவனை, சபையை அசட்டை பண்ணி உன் மேன்மையை அழித்துவிடும். நீதி 5 : 3–14 : முடிவில் ***எல்லாம் போச்சே*** என்று புலம்புகிற சூழ்நிலைக்குத் தள்ளப்படுவாய் என வேதம் அறிவுறுத்துகிறது. இதற்கு விலகியிருக்க ஒரே வழி தேவனுக்குப் பயந்து கீழ்ப்படிவதே என்கிறார் சாலமோன் ( நீதி 2 : 15,16,17 ). அப்படி ஒரு வேதாகம சாட்சி தான் நம்முடைய யோசேப்பு யாரும் இல்லாத தனிமையில் பாவம் செய்ய வலிய வாய்ப்பு வந்தும் அவன் தேவனுக்குப் பயந்து பொல்லாப்புக்கு விலகி ஓடினான் (ஆதி 39:9) என்று பார்க்கிறோம். ஆனால், தேவனால் பராக்கிரமசாலியாக உருவாக்கப்பட்ட சிம்சோன் தெலீலாள் இடம் தன் மேன்மையை இழந்து கேலிக்கு உரியவனானான் . நியா 14:3 – உலகநட்பு என்ற போர்வையில் தவறி விழுகிறதை கண்டு ஜாக்கிரதையாய் இருங்கள். சிந்தையை கிறிஸ்துவுக்குள் காத்துக் கொள்வோமாக.




***இறுதியாக,*** சூது என்கிற தவறான வழியில் பணம் சம்பாதிக்கும் முயற்சி ஆகும். இந்த உலகம் ஐசுவரியத்தின் மயக்கத்தில் சிக்கியிருக்கிறது என்கிறார் ஆண்டவர் (மத் 13:22). இதுவும் தேவனை விட்டுப் பிரிந்து போகச் செய்யக்கூடிய ஆபத்தான ஒன்று. ஆகான் பொருளாசையினால் இழுப்புண்டு ஜனங்களால்

கல்லெறிந்துக் கொல்லப்பட்டான். புதிய ஏற்பாட்டிலும் அனனியா-சப்பீராள் இருவரின் அடுத்தடுத்த மரணத்தை நாம் காண்கிறோம். இது தன்னை உடையவர்களின் உயிரை வாங்கும் (நீதி 1:19). இன்றைய நாட்களில் ஆன்லைன் சூதாட்டம் காரணமாக அநேக அருமையான உயிர்கள் பலியாவதை செய்தித்தாள்களில் வருத்தத்தோடே காண முடிகிறது. ஒருவன் தேவனுக்குத் தன் வாழ்வில் முதலிடம் கொடுக்கும்போது இப்படிப்பட்ட பொல்லாப்புகளில் இருந்து அவன் தப்புவிக்கப்படுகிறான். ஆபிரகாம் ஒருமுறை சோதோமின் ராஜாவுக்கு உதவியாக இருந்தபோது அவன் அநேக பொன் பொருட்களை ஆபிரகாமுக்கு கொடுக்க முன்வந்தான். ஆனால், ஆபிரகாம் நீர் அல்ல தேவனே என்னை ஐசுவரியத்தால் ஆசீர்வதிப்பார் என்று சொல்லி மறுத்துவிட்டான் ( ஆதி 14:22 ). மனிதர் பணத்திற்கு மதிப்பளித்து சபை கூடுதலையும், தேவனையும் சபை ஊழியர்களையும் அசட்டை பண்ணுகிறார்கள். அதற்கான பலனை அவர்கள் அடைவார்கள். நாம் முதலாவது தேவனுடைய ராஜ்ஜியத்தைத் தேடி தேவனுக்குப் பயந்து பொல்லாப்புக்கு விலகியிருப்போம். நம் தேவைகள் அனைத்தையும் தேவன் சந்தித்து நிச்சயம் நம்மை மேன்மைப்படுத்துவார். நாம் மனுஷரால் வரும் மகிமையை விரும்பாமல் தேவனால் வரும் மகிமையை நாடி அவரை மகிமைப்படுத்துவோம். (யோவான் 12:43) தேவக்கிருபை நம் அனைவரோடுங் கூட இருப்பதாக. ஆமென் !!!

†

## நீதிமொழிகள் புத்தகத்தில்

### 12 விதமான மனிதர்கள்

1. ஞானத்தைக் கண்டடைகிற மனிதன். 3:13
2. விவேகள்ள மனிதன். 12:23
3. நல்ல மனிதன். 14:14
4. உண்மையான மனிதன். 20:6
5. தயையுள்ள மனிதன். 11:17
6. புத்தியும் அறிவுள்ள மனிதன். 28:2
7. ஒரு கன்னிகையை நாடிய மனிதன். 30:19
8. பேலியாளின் மனிதன். 6:12
9. துர்சிந்தனைகளுள்ள மனிதன். 12:2
10. மதியற்ற மனிதன். 15:20
11. உக்கிரமுள்ள மனிதன். 22:24
12. பொல்லாத மனிதன். 24:1

# நீ ஆசீர்வாதமாய் இருப்பாய் !

*சகோ. KM. பிலிப் - பவானி*

**கி**றிஸ்துவுக்குள் பிரியமான திருமறை ஆசான் நேயர்கள் யாவருக்கும் இயேசுவின் இன்ப நாமத்தில் வாழ்த்துக்கள். உலகில் உள்ள எல்லா மதத்தினருமே தங்கள் கடவுள்களிடம் வேண்டிக் கொள்ளும் பொழுது, ***என்னை ஆசீர்வதியும்; என் குடும்பத்தை ஆசீர்வதியும்*** என்பதாகத்தான் இருக்கிறது. கிறிஸ்தவர்களாகிய நம்முடைய ஜெபமும்கூட இப்படியே என்பதைத்தான் பெரும்பாலும் காண்கிறோம். தேவனிடத்திலிருந்து ஆசீர்வாதங்களை எதிர்பார்ப்பது சரியே. நம்முடைய தேவனும் ஆசீர்வாதத்தின் தேவனேயாவார். ***கர்த்தர் நம்மை நினைத்திருக்கிறார். அவர் நம்மை ஆசீர்வதிப்பார். கர்த்தருக்குப் பயப்படுகிற பெரியோரையும் சிறியோரையும் ஆசீர்வதிப்பார்*** என்று சங். 115:12,13,15ல் காண்கிறோம். மேலும், ஆதியில் தேவன் ஆதாம், ஏவாளையும்; நோவா, அவன் குமாரரையும், ***நீங்கள் பலுகிப் பெருகி பூமியை நிரப்புங்கள்*** என்று ஆசீர்வதிக்கிறார் (ஆதி.9:1). ஆபிரகாமை அழைத்த தேவன், ***உன் சந்ததி வானத்தின் நட்சத்திரங்களைப் போலவும், கடற்கரை மணலத்தனையாகவும் பெருகவே பெருகப் பண்ணுவேன்*** என்று ஆசீர்வதிக்கிறார் (ஆதி. 22:17). தொடர்ந்து தேவன் ஈசாக்கு, யாக்கோபு, இஸ்ரவேல் வம்சத்தார் யாவரையும் ஆசீர்வதித்தார் என்றே வேதத்தில் வாசிக்கிறோம். ஆகவே, ஆபிரகாமின் ஆவிக்குரிய சந்ததியாராகிய நம்மையும் தேவன் ஆசீர்வதிப்பார் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை. ஆனால், மெய்க்கிறிஸ்தவர்களாகிய நம் வாழ்க்கையில் நாம் ஆசீர்வாதங்களை பெறுகிறவர்களாய் மட்டும் இருப்பதென்பது போதாது. இதைக் காட்டிலும் மேன்மையான ஒன்றை தேவன் நம்மிடத்தில் எதிர்பார்க்கிறார். அந்த எதிர்பார்ப்பைத்தான் ஆபிரகாமுக்கு, ***நீ ஆசீர்வாதமாயிருப்பாய்***, என்று ஆசீர்வாதமாகவே கொடுத்தார் (ஆதி. 12:2).

ஆம், அன்பானவர்களே! இதுதான் கிறிஸ்தவம். ***உன்னிடத்தில் நீ அன்பு கூருவது போல, பிறரிடத்திலும் அன்பு கூருவாயாக*** என்ற பிரதான கட்டளை (மத். 22:39) இதில் அடங்கியுள்ளது. இயேசுவானவர் பூமியிலே பிறந்த போது, அவருடைய பிறப்பு குறித்து தேவதூதர்கள், ***உன்னதத்திலிருக்கிற தேவனுக்கு மகிமையும், பூமியிலே சமாதானமும், மனுஷர்மேல் பிரியமும் உண்டாவதாக*** என்று அவரைப் புகழ்ந்தார்கள் (லூக்கா 2:14). ஆம், இயேசு மனுஷர்மேல் பிரியம் வைத்து, அவர்களை பாவத்தின் கொடுமையிலிருந்து விடுவிக்க கோரச் சிலுவையிலே தன்னை தியாக பலியாக ஒப்புக்கொடுத்து பூமியிலே சமாதானத்தை உண்டு பண்ணினார் (யோவான் 3:16). இயேசு இப்பூமியில் வாழ்ந்த நாட்களில் ***நன்மை செய்கிறவராக சுற்றித் திரிந்தார்*** என்று (அப். 10:38) வேதம் சாட்சி

கூறுகிறது. இவ்விதமாய் இயேசு உலகத்திற்கே ஆசீர்வாதமாய் இன்றுவரை திகழ்கிறார். பிரியமானவர்களே ! நன்மை செய்கிறவன் தேவனால் உண்டானவன் (3 யோவான் 11). நாமும் கிறிஸ்தவர்களாக தேவனுடைய பிள்ளைகளாக பிறந்திருக்கிறோம். நம் வாழ்க்கை மற்றவர்களுக்கு ஆசீர்வாதமாயிருக்கிறதா ? சிந்திப்போம்; சரியாய் செயல்படுவோம்.

தேவ மனிதன் யோனாவுக்கு, ஒரு பிரசங்கத்தின் மூலம் நினிவே பட்டணத்து மக்கள் அனைவரையும் தேவ கோபத்தினால் ஏற்படும் அழிவினின்று காப்பாற்றி அவர்களுக்கு ஆசீர்வாதமாய் இருக்கக்கூடிய ஒரு நல்ல வாய்ப்பை கொடுத்தார். ஆனால், தேவ திட்டத்தை அசட்டை செய்து கப்பல் ஏறி எதிர்த்திசையில் பயணம் செய்தான். இதினிமித்தம் பெருங்காற்று கப்பல் மீது மோதியதால் கப்பற்காரர்களுக்கு சாபமாய் மாறிப்போனான். சாபமான யோனா கடலில் தூக்கி எறியப்பட்டான். இது தேவையா? ***பாவியான ஒரு மனுஷன் மிகுந்த நன்மைகளைக் கெடுப்பான்*** என்பதே உண்மையாகும் (பிர. 9:18). இச்சூழலில் மனந்திருந்திய யோனா நினிவே சென்று தேவ வார்த்தையை ஒரே ஒரு நாள் பிரசங்கித்தான். தேவ எச்சரிப்பைக் கேட்ட ஜனங்கள் மட்டுமல்லாமல், ராஜா முதற்கொண்டு தேவ சமூகத்தில் தங்களைத் தாழ்த்தியதால் தேவன் அவர்களை மன்னித்து, ஒருலட்சத்து இருபதினாயிரம் பேருக்கு மதிகமான மக்கள் உயிரோடு காக்கப்பட்டார்கள். சபிக்கப்பட்ட அதே யோனா நினிவே பட்டணத்தாருக்கு ஆசீர்வாதமாய் விளங்கினான். அன்பானவர்களே! தேவன் நமக்குக் கொடுக்கும் ஒவ்வொரு வாய்ப்பையும் உண்மையாய் பிரயோசனப் படுத்தினால் நாம் மற்றவர்களுக்கு ஆசிர்வாதமாயிருப்போம்.

***நீ ஆசிர்வாதமாய் இருப்பாய்*** இதை முதலில் நம் குடும்பத்தில் துவங்கவும். அன்பான கணவன்மாரே! நீங்கள் தேவன் உங்களுக்குத் தந்த மனைவிக்கு ஆசீர்வாதமாயிருங்கள். படைப்பில் மனிதன் தனிமையாயிருப்பது நல்லதல்ல என்று, ஏற்று துணையாக ஏவாளை படைத்ததில் கணவனது வாழ்க்கையை மேம்படுத்துவதில் தேவனுக்கு உள்ள அக்கறையை வெளிப்படுத்துகிறது அல்லவா! இப்படி தேவனால் கொடுக்கப்பட்ட மனைவி மீது அன்பு செலுத்தி ஆசீர்வாதமாய் நிற்கவேண்டும். ஈசாக்கு திருமணம் செய்த ரெபேக்காளுக்கு இருபது ஆண்டுகளாகியும் குழந்தை பாக்கியம் இல்லாதிருந்தது. ஆனாலும், தேவப்பிள்ளை ஈசாக்கு, மலடி என்று மனைவியை தள்ளி விடாமல் . தன் மனைவி கர்ப்பந்தரிக்கும்படியாய் ***கர்த்தரிடத்தில் ஜெபித்தான்*** (ஆதி. 25:21). ஜெபத்தைக் கேட்ட தேவன் ரெட்டை ஆண் குழந்தையைக் கொடுத்து ரெபேக்காளை மிகவும் ஆசீர்வதித்தார். இது மனைவிக்கு எவ்வளவு பெரிய சந்தோஷத்தையும், சமாதானத்தையும், சமுதாயத்தில் தாய் என்ற பெருமையையும் கொடுத்திருக்கும் என்பதை யோசித்துப் பாருங்கள் (ஆதி. 25:19-26). ஒரு பக்தியுள்ள ஜெபிக்கின்ற கணவன் மனைவிக்கு ***ஆசீர்வாதமாயிருக்க*** முடியும்.

பிரியமான மனைவிமாரே! உங்கள் கணவருக்கு நீங்கள் ஆசீர்வாதமாயிருக்க வேண்டும். படைப்பில் தேவன் ஏவாளைப் படைத்து ***அவளை மனுஷனிடத்தில் கொண்டு வந்தார்*** (ஆதி. 2:22). ***நீங்கள் ஏற்ற துணையாயிருக்கும்படி தேவனால் இணைக்கப்பட்டவர்கள்*** என்பதை மறந்து விடாதீர்கள். ***ஸ்திரீயே புருஷனுக்காக சிருஷ்டிக்கப்பட்டவள்*** (1 கொரி. 11:9). 2 ராஜா. 4:8-37 பகுதியில் சூனேம் ஊருக்கு தேவ மனிதன் எலிசா வந்தபோதெல்லாம் சூனேமியாள் எலிசாவை சந்தித்து தன் வீட்டிற்கு அழைத்து போஷித்து உபசரித்து கனப்படுத்தினாள். மேலும், தன் கணவனின் சம்மதத்தின் பேரில் மெத்தையில் ஒரு வீட்டைக்கட்டி தேவையான வசதிகளை செய்து கொடுத்தாள். இப்படி எந்த எதிர்பார்ப்பும் இல்லாமல் மனப்பூர்வமாய் கொடுத்து தேவ மனிதனைக் கனப்படுத்திய, இந்த மலடி சூனேமியாளுக்கு தேவன் ஒரு ஆண் குழந்தையை கொடுத்து கனப்படுத்தினார். பக்திக்குரிய மனைவியின் ஞானமான செயல்கள் கணவனை, தகப்பன் என்ற நிலைக்கு உயர்த்தி ஆசீர்வதிக்கப்பட்டவனாக மாற்றியது; பெருமைப்படுத்தியது. மனைவி சூனேமியாள் குறைவை நிறைவாக்கி கணவனுக்கு ஆசீர்வாதமாய் வாழ்ந்தாள். அன்பானவர்களே! ஆவிக்குரிய வாழ்க்கையில் முழு மனதுடன் உற்சாகமாய் செயல்பட்டால் மனைவியானவள் கணவனுக்கு ஆசீர்வாதமாய் திகழமுடியும். மனைவிமார் கணவனுக்கு ஆசீர்வாதமாயிருப்பதில் தேவனும் கனப்படுத்தப் படுகிறார்.

பிரியமான தகப்பன்மார்களே! நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு ஆசீர்வாதமாயிருங்கள். நோவாவின் நாட்களில் மனுஷருடைய அக்கிரமம் பூமியில் பெருகியதால் தேவன் ஜலத்தினால் பூமியில் வாழும் மனிதர்கள் முதற்கொண்டு எல்லா உயிரினங்களும் அழிக்கப்பட்டன. ஆனால், நோவாவும், மனைவியும், பிள்ளைகளின் குடும்பமும் காக்கப்பட்டது. காரணம், தகப்பன் நோவா கர்த்தருக்கு முன்பாக நீதிமானும், உத்தமனுமாய், தேவனோடு சஞ்சரித்து வாழ்ந்ததால் நோவாவின் குடும்பத்திற்கு கர்த்தருடைய கண்களில் கிருபை கிடைத்தது (ஆதி. 6:7,8).

யோசுவாவின் நாட்களில் முரட்டாட்டமும், பக்தியுமற்ற ஏராளமான மக்களுக்கு முன்பாக யோசுவா தன் குடும்பத்தை நிறுத்தி, ***நானும் என் வீட்டாருமோவென்றால் கர்த்தரையே சேவிப்போம்*** என்றான் (யோசு.24:15) உரத்த குரலில் உறுதியாய் சாட்சி சொல்லி தன் குடும்பத்தின் பக்தியை நிலை நாட்டுவதை பார்க்கிறோம். ஆம், ஒரு தகப்பனின் உண்மையான பக்தி குடும்பத்திற்கே ஆசீர்வாதமாய் திகழும் என்பதில் சந்தேகமேயில்லை. புதிய ஏற்பாட்டிலும் ஒரு புறஜாதியானாகிய கொர்நெலியுவின் பக்தி வாழ்க்கை அவன் குடும்பத்தாரையும், உறவின் முறையாரையும், அவன் சிநேகிதரையும் சுவிசேஷத்தை கேட்கச் செய்து, மனந்திரும்பி ஞானஸ்நானம் பெற்று சபையில் சேர்க்கப்பட்டார்கள். ஒரு சமூகத்திற்கே கொர்நெல்யு ஆசீர்வாதமாய் நின்றார்.

அன்பான தாய்மார்களே! நீங்கள் தீமோத்தேயுவின் தாய் ஐனிக்கேயாள்

போல பிள்ளைகளுக்கு ஆசீர்வாதமாய் இருக்க வேண்டும். ஐனிக்கேயாள் தன் தாய் லோவிசாளுடன் இணைந்து தன் மகன் திமோத்தேயுவை விசுவாசத்தில் உறுதியாய் நிலைக்கச் செய்தாள். இந்த தாயின் ஆசீர்வாதம் வாலிபன் தீமோத்தேயுவை பிரியமுள்ள குமாரனாக (2 தீமோ. 1:2) விசுவாசத்தில் உத்தமகுமாரனாக (2) மாயமற்ற விசுவாசியாக (4) நல்ல போர்ச் சேவகனாக, வெட்கப்படாத ஊழியக்காரனாக உலகம் உள்ளளவும் நம்முன் வெளிச்சமாய் பிரகாசிக்கச் செய்து கொண்டிருக்கிறது. தாய்மாரே! பிள்ளைகளுக்காய் ஜெபியுங்கள், அன்பாய் போதித்து நடத்தி ஆசீர்வாதமாய் இருங்கள்.

அருமையான வாலிபப் பிள்ளைகளே! வாலிபன் யோசேப்பு போத்திபரிடத்தில் அடிமையாக விற்கப்பட்ட போதிலும், செய்யாத குற்றத்திற்காய் சிறையில் அடைக்கப்பட்ட போதும் எல்லோருக்கும் ஆசீர்வாதமாகவே வாழ்ந்தான். 13 ஆண்டுகள் பலவிதமான சோதனைகள் ஏற்பட்டபோதும் சோர்ந்து போகாமல் ***கர்த்தரை நம்பி நன்மை செய்கிறவனாகவே*** வாழ்ந்தான். தேவன் யோசேப்பை நாட்டிற்கே அதிபதியாய் உயர்த்திய போது கொடிய பஞ்சத்தில் நாட்டிற்கும், தன் வீட்டாரனைவருக்கும் ஆசீர்வாதமாகவே திகழ்ந்தான். தேசமே பஞ்சத்திலிருந்து காப்பாற்றப்பட்டது. பிரியமான வாலிபர்களே! ***நீங்கள் பலவான்கள் உலகத்திலிருப்பவனிலும் உங்களில் இருப்பவர் பெரியவர்***. உங்கள் ஆவிக்குரிய வாழ்க்கையின் வெளிச்சம் அநேக வாலிபரை பாவ இருளிலிருந்து இரட்சிப்பின் வெளிச்சத்திற்கு கொண்டு வரும். யோசேப்போடு இருந்த தேவன் உங்களோடிருந்து அநேகருக்கு ஆசீர்வாதமாக உங்களை உயர்த்துவார்.

யூத குலத்தை சார்ந்த எஸ்தரை தேவன் ராணியாக உயர்த்தினார். ஒரு காலகட்டத்தில் யூத இனத்தை முழுவதும் அழித்துவிட ராஜா, ஆணை பிறப்பித்தான். இதனால் யூத இனத்தில் மகாதுக்கமும், பயமும், புலம்பலும் உண்டாகி, உபவாசித்து இரட்டுடுத்தி சாம்பலில் உட்கார்ந்தார்கள். இதைக் கேள்விப்பட்ட எஸ்தர் ராணி ***நான் செத்தாலும் சாகிறேன்*** என்று சொல்லி சட்டத்தை மீறி ராஜாவிடம் சென்றாள். ராஜாவின் பாதங்களில் விழுந்து அழுது விண்ணப்பித்து ராஜாவின் தயவைப் பெற்று யூத இனத்தை சட்டத்திலிருந்து விடுவித்து உயிரோடே காத்தாள். ஒரு பெண் ஒரு இனத்திற்கே ஆசீர்வாதமானாள்.

அன்பானவர்களே! நீங்கள் ஒரு கணவனாய், மனைவியை; தகப்பனாய், தாயாய்; வாலிபர்களாய், பிள்ளைகளாய், சகோதரர்களாய், சகோதரிகளாய் இருக்கலாம். நாம் எந்த நிலையில் இருந்தாலும் நாம் தேவனை உடையவர்கள். தேவனால் உண்டானவர்கள் (1 யோவான் 4:4). தேவன் கொடுத்த இந்த வாழ்க்கையை பயன்படுத்தி நம்மைச் சுற்றிலும் உள்ளவர்கள் பாவத்தின் கோரப் பிடியிலிருந்து இரட்சிக்கப்பட ஜெபித்து ஆசீர்வாதமாய் ஒளி வீசுவோம். ***நீ ஆசீர்வாதமாயிருப்பாயாக***.

†

# ஆசீர்வாதத்தை பகிர்ந்து கொள்ளுங்கள்

## Derek Broome

சபையில் அங்கமாய் இருப்பது கிறிஸ்தவர்களாக நாம் அனுதினம் அனுபவிக்கும் ஆச்சரியமான ஆசீர்வாதமாய் இருக்கிறது. முதலாவதாக, நாம் இரட்சிக்கப்பட்டு கர்த்தரால் சபையில் சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கிறோம் என்பதை அறிந்திருக்கிறோம். அப்போஸ்தலநடபடிகள் (2:47). இவ்வுலகில் அநேக ஜனங்கள் நாம் முன்பு எப்படி பாவத்தில் இழந்து போயிருந்தோமோ அதைப்போல அவர்களும் இழந்து போன நிலையில்தான் இருக்கிறார்கள். நம் பாவங்கள் கழுவப்பட்டிருக்கிறது என்பதை அறிந்து கொள்வது ஓர் அளப்பரிய ஆசீர்வாதமாகும் (1 கொரிந்தியர் 6:11). அதேபோல் நாம் இப்போது தேவனோடு சரியான உறவில் இருப்பதும் ஓர் ஆசீர்வாதமாகும். இரட்சிக்கப்பட்ட கிறிஸ்தவர்களாக நாம் ஆராதிக்கிறோம், வேலை செய்கிறோம். ஒருவருக்கொருவர் ஐக்கியம் கொள்கிறோம். அதேபோல் தேவனோடு ஐக்கியம் கொள்கிறோம். தேவனுடைய குடும்பத்தில் நாம் அங்கமாய் இருப்பது ஓர் ஆச்சரியமான அனுபவமாகும். ஏனென்றால், தேவனுடைய குடும்பத்தில் நாம் கிறிஸ்தவர்களாக இணைந்து பணிபுரியவும், மேம்படவும் முடியும். ஒரு கிறிஸ்தவருடைய வாழ்க்கையில் ஆனந்தம் கொள்வதற்கும், ஆறுதலை அடையவும் கிறிஸ்தவ குடும்பம் என்று ஒன்று இருக்கிறது என்பதை அறிந்து கொள்வது ஓர் ஆச்சரியமான ஆசீர்வாதமாகும். சிலரைப் பொறுத்தவரை அவர்களுக்கு இருக்கும் ஒரே குடும்பம் சபைதான். நாம் கிறிஸ்துவின் சரீரத்தில் அங்கமாய் இருப்பதினால் மிகவும் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கிறோம் என்பதை நாம் எப்போதுமே நினைவில்கொள்ளவேண்டும்.

கிறிஸ்துவின் சபையில் அங்கம் வகிப்பது ஓர் மிகப்பெரிய ஆசீர்வாதமாகும். ஆனால், அந்த ஆசீர்வாதத்தை நாம் என்ன செய்து கொண்டிருக்கிறோம்? அந்த ஆசீர்வாதத்தை நாம் நமக்குள்ளேயே வைத்துக் கொண்டிருக்கிறோமா? அல்லது அந்த ஆசீர்வாதத்தை உலகத்தோடு பகிர்ந்து கொண்டு வருகிறோமா? (மாற்கு 16:15-16). பாவத்தில் தங்களை இழந்துபோய் இருக்கிறவர்கள் உண்மையாகவே இரட்சிக்கப்பட வேண்டும் என்று நாம் விரும்பினால் இயேசு கிறிஸ்துவின் நற்செய்தியையும் அவருடைய சபையில் அங்கம் வகிப்பதினால் உண்டாகும் ஆசீர்வாதங்களையும் ஒட்டுமொத்த உலகத்திற்கும் பகிர வேண்டும் (1தீமோத்தேயு 2:4). நம் ஜீவியங்கள் இயேசு கிறிஸ்துவின் நற்செய்தியை இவ்வுலகத்திற்கு பகிர்ந்து கொடுக்கும் ஆசையினாலும், பொறுப்பினாலும் நிறைந்து இருக்கிறது என்று நான் நம்புகிறேன். நம்மால் பிறருக்கு செய்யும் மிகப்பெரிய நன்மை சிலுவையின் செய்தியையும், நம் ரட்சகர் நம் எல்லோர் மீதும் வைத்திருக்கும் அன்பையும் அவர்களுக்கு பகிர்ந்து கொள்வதாகத்தான் இருக்க முடியும். நாம் கிறிஸ்துவின் சபையில் அங்கமாய் இருப்பதினால் மிகவும் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கிறோம். எனவே, இந்த ஆசீர்வாதத்தை அனுதினமும் மற்றவர்களுக்கும் பகிர்ந்து கொடுக்க நாம் ஒரு தீர்மானம் எடுப்போம். †

# ஜனவரி 11, 2025-ல் கரூர், பரமத்தியில் நடந்த 66-வது இலவச மருத்துவ முகாமின் போது...











## World Evangelism Gospel Media

Rajanayagam & Benny Martin On Nambikkai TV
Every Tuesday 6.30 - 7:00 am

Rajanayagam & Benny Martin On Nambikkai TV
Every Friday 7.30 - 8.00 am

Arjunan on Nambikkai TV
TV : On Monday & Saturday 7.30 - 7.45 pm

Hindi TV Program : Sunny, Francis & Vinay David Speaking
Sunday & Tuesday ( 7:00 - 7:30 ) pm on
Shubhasandesh Hindi Channel

P.K. Varghese In Malayalam :
Every Saturday 6:00 - 6:30 am on Jai Hind Channel TV

Philemon & Kingsley on Tamilan TV and Nambikai TV :
Every Sunday 6:45 - 7:00 am
Every Friday 6.00 - 6.30 am
Joy TV - Saturdays 9.00 pm Salvation TV - Every Sunday 2.00 pm

Joshua & Ricky Gootam In Telugu:
Every Saturday at 6:00 pm Subhavartha Channel
Every Wednesday at 6:30 pm on Rakshana Channel
Every Thursday at 11:00 am on Rakshana Channel
Satyavani T.V. online : www.sakthitv.in
Every Wednesday & Friday at 8.00 pm

For English Voice of Truth
Contact - Brothers Philemon or Kingsley
@ Po box 15 , 45/c1 Church Lane, Coronation Street,
Arasaradi, Madurai - 625016
9244204420 / 21, 0452 - 2607026



**"Registered" with RNI No: TNTAM/2006/20466**
Postal regn. No. Erode/26/2024 - 2026
**Licensed to Post without pre payment**
**No: TN / WR / ERD / 03 / WPP / 2024 - 2026**
Published on 17/18 th of Every Month
Posted at Erode HPO on 20/21 of Every Month.

**சத்தியத்தின் குரல்**
என்ற நூல் வேண்டுவோர்
எங்களைத் தொடர்பு கொள்ளவும்.
- ஆசிரியர்




## எங்களது இதர வெளியீடுகள்

**தபால் செலவிற்கு பணம் அனுப்பி**
**இந்நூல்களைப் பெற்றுக் கொள்ளலாம்.**

**வேதாகம அஞ்சல் வழிக் கல்வியில்**
**ஒரு புதிய அத்தியாயம்**
- Advanced Bible Correspondence Course -

பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்க விரும்புவர்களுக்கு
இது ஓர் அரிய வாய்ப்பு.
ஆம், வேதாகமமும், வேதாகமம் சார்ந்த பாடங்களும் கொண்டு 7 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, மிக ஆழ்ந்த முறையில் நெறிமுறைப்படுத்தப்பட்ட 100 பாடங்கள் அடங்கிய விரிவான வேதாகமக் கல்வி இது.
விருப்பமுள்ளவர்கள்
மணியார்டர் அனுப்பி பதிவு செய்து கொள்ளவும்.

இயக்குனர்
**அஞ்சல் வழி வேதாகமக் கல்வி**
த.பெ.எண் 27, காங்கேயம் 638-701, தமிழ்நாடு, இந்தியா.

To:

**திருமறை தியானம்**
**நம்பிக்கை** TV
செவ்வாய் - காலை 6:30 - 7:00 மணி
**நம்பிக்கை** TV
வெள்ளி - காலை 7:30 - 8:00 மணி

Printed by : K.C. Senthilkumar, at Sun Offset Printers, 50 Kovai Road, Kangayam - 638 701.
Editor: S. Rajanayagam.